ISSN 1391-9504

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுபவர்: திலகன்
சித்திரம் : அபயன்

பொரலபாற்றிலிருந்து..

ஒல்லாந்தரின் எல்லைகள் விரிவு

இம்முரண்பாடு பெரும் பிரச்சினையாக மாறியமையால் ஒல்லாந்தரின் கீழ் இருந்த பிரதேசங்களின் எல்லையில் இருந்த இடங்களில் மன்னரின் படையினர் அடிக்கடி நடமாடினர். இதனால், ஏற்பட்ட விளைவு என்னவென்றால் சமாதானத்துடன் வாழ விரும்பிய குடிமக்கள் ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின்கீழ் வருவதற்கு விரும்பினர்.

இதற்கிடையில், மன்னனின் கொடூரங்கள் வரவர அதிகரித்தன. இதனைப் பொறுக்கமுடியாது மன்னனின் மிக நெருங்கிய ஆதரவாளரான நான்கு கோரளையின் திசாபதியாகிய தென்னக்கோனும் ஒல்லாந்தருடன் இணைந்து கொண்டான். இது கி.பி 1673 இல் நடைபெற்றது. அவர் பெருந்திரளானவர்களுடன் ஒல்லாந்தருடன் இணைந்து கொண்டார். இதனால், மன்னன் மிகவும் கோபம் அடைந்தான். தென்னக்கோன் திசாபதியின் உறவினர்களையும் நண்பர்களையும் பிடித்து பெருந்தண்டனை வழங்கினான்.

இத்தகைய கடும் போக்கினால் நான்கு கோரளை மக்களும் கூட ஒல்லாந்த சங்கத்தின் கீழ் வாழ விரும்பினர். இது தென்னக்கோன் திசாபதியின் கட்டளைப்படியே நடந்தேறியது என்றே ஒல்லாந்தர் நம்பினர். அதனால், அவரை சிறப்பாகக் கவனித்தனர். அது மட்டுமல்ல; மற்றுமொரு காரணமும் இருந்தது. ஏற்கனவே தென்னக்கோன் திசாபதி வெளிப்படையாகவே மன்னனின் ஆதரவாளனாக இருந்தமையே இதற்குரிய காரணமாகும். இந்த நிகழ்வோடு ஒல்லாந்தரின் தேச எல்லை சீதாவாக்கை வரை விரிவடைந்தது. இதனால், இரண்டாம் இராஜசிங்க மன்னன் மென்மேலும் கோபமடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப்பரிசில் சித்தியடைந்த 30,000 பேருக்கு மாணவர் உதவித்தொகை பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது

Vijey விஜய்
வீஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளி மட்டத்திற்கும் மேலதிகமாக புள்ளிகளைப் பெற்று, திறமையை வெளிப்படுத்திய 30,000 மாணவர்களை தெரிவு செய்து, மாணவர் உதவித் தொகை பெற்றுக்கொடுப்பதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளதாகவும் அதற்கமைய, தமிழ்மொழி மூலம் தோற்றி சித்தியடைந்த 5,000 மாணவர்களையும் சிங்கள மொழி மூலம் தோற்றி சித்தியடைந்த 25,000 பேரையும் புலமைப்பரிசில்தாரர்களாகத் தெரிவு செய்வதாக அத்துருகிரிய,ஒருவல கனிஷ்ட வித்தியாலயத்தின் புதிய கணினி கூடத்தின் திறப்புவிழா வைபவத்தில் உரையாற்றும் போது கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்; "தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைதல், சித்தி அடையத் தவறுதல் என்பன கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. வெட்டுப் புள்ளி மட்டத்துக்கு உட்பட்ட அனைவரும் மாணவர் உதவித்தொகை முறைக்குள் உள்ளடக்கப்படுகின்றனர். எனினும், 145 வெட்டுப்புள்ளியாக அறிவிக்கப்பட்ட நிலையில், அதற்கு மேலதிகமாக புள்ளிகளைப் பெற்றவர்கள் சித்தியடைந்தவர்கள் என்றும் 144 புள்ளிகளைப் பெற்றவர்கள் சித்தியடையாதவர்கள் என்றும் தவறான எண்ணத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். எந்தவொரு பிள்ளையையும் சித்தியடைந்தவர்-சித்தி அடையாதவர் என்று இதனூடாக கணிப்பதில்லை. மாறாக, புலமைப் பரிசில் வழங்குவதற்கு தகுதியானவர்களை மதிப்பிடுவது மாத்திரமே புலமைப்பரிசில் பரீட்சையூடாக மேற்கொள்ளப்படுகின்றது" என்று தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் தெரிவிப்பு

பாடசாலை சீருடைத்துணி
டிசம்பர் விடுமுறைக்கு முன்னர் வழங்கப்படும்

எதிர்வரும் வருடத்துக்காக பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்ற சீருடைத் துணியை மூன்றாம் தவணை பாடசாலை விடுமுறைக்கு முன்னர் வழங்குவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதற்காக இம்முறை 104.75 லட்சம் மீற்றர் அளவு துணி தேவைப்படுவதாகவும் அது உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், யாழ் மாவட்டத்தின் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் 15 வருடங்களுக்குப் பின்னர், இம்முறை ஏ-9 பாதையூடாக அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் இதனால், இந்தத் துணிகளை கடல் மார்க்கமாக அனுப்புவதற்கு அறவிடப்பட்ட தொகையிலும் 50 சதவீதமான தொகையை சேமிக்க முடிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வினாத்தாள்களுக்கென பணம் சேகரிக்கப்பட்டுள்ளது

கல்வி அமைச்சுக்கு புகார்



ஒரு சில பாடசாலைகளில் 2, 3, 4, 5 ஆகிய தரங்களுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்களை அச்சிடுவதற்காகவென பணம் சேகரிக்கப்படுவதாக கல்வி அமைச்சுக்கு புகார் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சை வினாத்தாள் தயாரிப்பதற்காக கல்வி அமைச்சினால் நிதி வழங்கப்பட்டிருந்த போதும், தரம் 2 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புகளில் மேற்படி பரீட்சைக்கான வினாத்தாள்களைத் தயாரிப்பதற்காக நிதி வழங்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை காரணமாக அதிகமான பாடசாலைகளில் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புகளில் ஒரு மாணவரிடமிருந்து 40.00 ரூபா வீதம் அறவிடப்பட்டுள்ளதாகவும், பாடசாலைகளில் பணம் சேகரிக்கப்படுவது முழுமையாகத் தடை செய்யப்பட்டிருக்கும் நிலையிலேயே சில பாடசாலைகளில் இவ்வாறு இடம்பெற்றிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதான பாடசாலை அனுமதி, மாணவர் உதவித்தொகை:
தரம் 5 புலமைப்பரிசில்தாரர்களுக்குப் பெற்றுக்கொடுக்க விரைவில் நடவடிக்கை

இவ்வாண்டின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, பிரதான பாடசாலையில் அனுமதி மற்றும் மாணவர் உதவித்தொகை என்பனவற்றை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்காக விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர், அவை தொடர்பான விடயங்கள் கணினி மயப்படுத்தப்பட்டு, மூன்று வாரங்களுக்குள் புலமைப்பரிசில்தாரர்களை பிரதான பாட்சாலைகளில் அனுமதித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் 15,000 மாணவர்களுக்கு மாணவர் உதவித் தொகை பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தபால் மூல ஆங்கிலப் பாடநெறிகள்
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
கிளாஸ் போகும் காலம். நேரம் மிகுதி / குருகிய காலம் / ஆங்கில முன் அறிவு தேவையில்லை. வயது கட்டுப்பாடு இல்லை. வீண் கட்டணங்கள் செலுத்த வேண்டாம்
இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் உங்களுக்கு
இலவச அழகிய பேக் ஒன்று Dialog Sim Cad (தொலைபேசி இணைப்பு) Spoken English Book மற்றும் Spoken English Video CD என்பன பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இலவசமாக வழங்கப்படும்.
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
எமது DIPLOMA சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்.
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாப்பஹுவ

யாப்பஹுவ இராஜதானி கி.பி 1272-1300 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்குரியதாகும். இக்காலப்பகுதிக்குரிய மன்னர்களின் அரண்மனை புகழ் பெற்ற அலங்காரம் நிறைந்த கட்டடக்கலை நிர்மாணத்தை வெளிப்படுத்தக் கூடிய ஓர் இடமாகக் கருதப் படுகின்றது. இவை உலகப் புகழ் பெற்ற படைப்புக்களாகக் கருதப் படுகின்றன.

தம்பதெனிய காலப் பகுதியில் எதிரிப்படைகளிடம் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக புவனேகபாகு மன்னன் யாப்பஹுவாவுக்குச் சென்றான். அங்கு 4 வருடங்கள் தங்கி ஆட்சி செய்தான். இந்த சின்னங்களையும் பிடுங்கி எடுத்து பாண்டிய நாட்டுக்கு கொண்டு சென்றதாக வரலாறு கூறுகின்றது.

அதனைத் தொடர்ந்து இப்பகுதியை ஆண்ட பராக்கிரமபாகு மன்னரின் மகள் பாண்டிய நாட்டுக்குச் சென்று அம்மன்னனுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவற்றை மீண்டும் இங்கு கொண்டு வந்து சேர்த்தார். பிற்காலத்தில் மூன்றாவது பராக்கிரமபாகு மன்னராக பொலன்னறுவை இராசதானியை ஆண்டவரும் இவராவார். இக்காலப்பகுதியில் (கி.பி 1292) யாப்பஹுவ; யசபவ்வ, பஹபவ்வ, யாபவ்வ என்று வெவ்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கப் படுகின்றது.



பிற்காலத்தில் ஆர்ய வம்ச அரசன் ஒருவனாலும் அவனது படைகளாலும் யாப்பஹுவ கைப்பற்றப்பட்டது. அங்கிருந்த புத்தரின் புனித தந்தத்தையும் மற்றும். அடையாளச் சின்னங்களையும் பிடுங்கி எடுத்து பாண்டிய நாட்டுக்கு கொண்டு சென்றதாக வரலாறு கூறுகின்றது.

யாப்பஹுவாவை இரண்டாவது புவனேகபாகு மன்னன் ஆட்சி செய்தான்.

மாபெரும் பனித் திருவிழா

ஐரோப்பாவில் மாபெரும் பனித்திருவிழா சுவீடனில் உள்ள கிருனாவில் நடைபெற்று வருகிறது. இதில் பனிச்சிற்பங்கள் கண்காட்சியும் பெரிய அளவில் நடைபெறுகிறது.

கிருனாவுக்கு அருகில் உள்ள எஸ்ரேஞ்சில் அமைந்திருக்கும் விண்வெளி மையத்திலிருந்து சுவீடனின் முதல் செயற்கைக் கோளான 'வைக்கிங்' ஏவப்பட்டதன் நினைவாக 1985 ஆம் ஆண்டு முதல் முறையாக இந்தப் பனிச்சிற்பக் கண்காட்சி நடத்தப்பட்டது. அதற்கு நல்ல வரவேற்புக் கிடைத்ததால் ஆண்டுதோறும் பனித்திரு விழாவை நடத்த கிருனா நகர மேயர் முடிவெடுத்தார்.

இன்று இது அனைவராலும் ஆவலோடு எதிர்பார்க்கப்படும் குளிர்கால நிகழ்வாகிவிட்டது. பனிச்சிற்பப் போட்டியில் பங்கேற்கும் உள்நாட்டு, வெளிநாட்டு அணிகளுக்கு 4 நாள் அவகாசம் அளிக்கப்படுகிறது. அதற்குள் அவர்கள் 3 மீற்றர் அகலம், 3 மீற்றர் உயரம் உள்ள பனிக்கட்டியில் சிற்பங்களை உருவாக்கவேண்டும்.

இத்திருவிழாவில் உலகிலேயே மிகப்பெரிய பனி வீடு உருவாக்கப்படுகிறது. நாய், மான்கள் என்பனவற்றால் இழுக்கப்படும் வண்டிப் பந்தயங்களும் நடத்தப்படுகின்றன. ஐஸ் பாறைகளாலேயே உருவாக்கப்பட்ட ஹோட்டல்களும் இங்கு நடத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீர் நிறைந்த நிலா

நிலவில் கூடியளவு நீர் இருப்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே, இந்தியாவின் சந்திரயான்-1 செயற்கைக் கோள் அனுப்பியிருந்த புகைப்படங்கள் மற்றும் தகவல்களினூடாக சந்திரனில் நீர் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டது. இதே நிலையில், சந்திரனின் தென்துருவம் சூரிய ஒளியே படாததாக இருக்கின்றது. ஆக, அந்தப் பகுதியிலும் நீர் இருக்குமா? என்பதற்கான ஆய்வுகள் தொடரப்பட்டன.

அதற்கிணங்க, கடந்த மாதம் நாஸா விஞ்ஞானிகள் இரண்டு ரொக்கெட்களை நிலவின் தென் துருவத்தில் மோதச் செய்து ஆராய்ந்தனர். அந்த மோதலினால் தென் துருவத்தில் சுமார் 20-30 மீற்றர் ஆழத்துக்கு பள்ளம் ஏற்பட்டதோடு, மோதலின் போது அந்தப் பள்ளத்திலிருந்து சுமார் 100 கிலோகிராமுக்கு மேற்பட்ட பனிக்கட்டிகள் சிதறியதாக கூறப்படுகின்றது.

அதனை அடுத்து, சந்திரனின் மேற்பரப்பெங்கிலும் நீர் இருப்பது மேலும் உறுதிப் படுத்தப்பட்டது.

இதுபற்றி மேற்குறித்த ஆய்வுத்திட்டத்தின் இயக்குனரான என்டனி என்ற விஞ்ஞானி கருத்துத் தெரிவிக்கையில்;

"சந்திரனின் மேற்பரப்பானது வறட்சியானது என்றும் அதனால் அங்கு நீர் இருக்க வாய்ப்பில்லை என்றும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நம்பப்பட்டு வந்தது. ஆனால், தற்போது நாம் நிலவில் நீர் இருப்பதை கண்டறிந்துள்ளோம். அதுவும் சிறிதளவு அல்ல. மிகக் கூடுதலான அளவில் அங்கு நீர் இருக்கின்றது. ரொக்கெட் மோதியதால் ஏற்பட்ட பள்ளத்திலிருந்து இரண்டு கெலன்கள் வரையான நீர் கிடைத்துள்ளது" என்று கூறியுள்ளார்.

அத்துடன், இதனை ஆரம்ப கட்ட பரிசோதனையாகவே நாஸா விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

சந்திரனின் தென் துருவத்தில் நிரந்தரமாகவே ஒரு கற்றை போன்ற அடையாளமொன்று காணப்படுகின்றது. அது நீராகவே இருக்கும். எனவே, அப்பகுதியில் மேலதிக ஆய்வுகளைத் தொடர்வதற்கும் நாஸா விஞ்ஞானிகள் எதிர்பார்த்துள்ளனர்.

முதலாவது விண்வெளி ஹோட்டல் 2012 இல் திறப்பு

உலகின் முதலாவது விண்வெளி ஹோட்டலாகக் குறிப்பிடப்படுகின்ற 'கெலாக்டிக் சூட்', 2012 ஆம் ஆண்டு திறக்கப் படவுள்ளது. முன்னாள் விண்வெளி ஆராய்ச்சியியல் பொறியியளாளரான சேவியர் கிளாரமன்ட் என்பவரே 'கெலாக்டிக் சூட்' என்ற பெயரிலான சொகுசு ஹோட்டலை விண்வெளியில் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இங்கு சென்று தங்குவதற்கு முன்பதிவு செய்வோருக்கு, பயணத் தினத்துக்கு 8 வாரங்களுக்கு முன்பிருந்தே பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். ஒவ்வொரு முறையும் 4 பேர் ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். அவர்களுடன் 2 விண்வெளி வீரர்களும் அனுப்பப்படுவர். இது பூமியில் இருந்து 450 கி.மீ உயரத்தில் அமையும் ஹோட்டல் என்பதால், விண்வெளி வீரர்களுக்கான உடைகளே பயணிகளுக்கும் வழங்கப்படவுள்ளன. அவற்றை அணிந்து, ஹோட்டல் அறைகளின் சுவரைப் பிடித்தவாறே விருந்தாளிகள் நகர வேண்டியிருக்கும்.

பூமியிலிருந்து ரொக்கெட் மூலம் ஹோட்டலை சென்றடைய ஒன்றரை நாள் எடுக்கும். இந்த விண்வெளி ஹோட்டலானது மணிக்கு 30,000 கி.மீ வேகத்தில் சுற்றும். 80 நிமிடங்களுக்கு ஒருமுறை பூமியை சுற்றி வரலாம். அதன்படி, 24 மணி நேரத்திற்குள் 15 முறைகளுக்கு சூரியன் தோன்றி மறைவதைப் பார்க்கலாம் என்று கூறப்படுகின்றது. இந்த விண்வெளி ஹோட்டலில் தங்குவதற்கு இப்போதிலிருந்தே 200 பேர் வரையிலானோர் ஆர்வம் தெரிவித்துள்ளனர். www.galactic suite.com என்ற இணையத்தளம் மூலம் 43 பேர் முன்பதிவு செய்துள்ளனர்.

39 நாட்களில் செவ்வாயை சென்றடையலாம்

பூமியில் இருந்து சுமார் 3.5 கோடி மைல்களுக்கு அப்பால் செவ்வாய் அமைந்துள்ளது. இங்கு மனிதர்களை அனுப்புவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

அதன்படி, 'ப்ளஸ்மா 'ரொக்கெட் டெக்னொலொஜி' எனப்படுகின்ற புதியதொரு தொழில்நுட்பத்தினை அடிப்படையாக வைத்து, செவ்வாய் செல்வதற்காக ஒரு ரொக்கெட் வடிவமைக்கப்பட்டு வருகின்றது. இந்த ரொக்கெட் மூலம் 39 நாட்களில் செவ்வாயை சென்றடையலாம் என்று கூறப்படுகின்றது.

அமெரிக்காவில் உள்ள 'ஓட் ஒஸ்ட்ரா' எனும் தொழில்நுட்ப நிறுவனமே இந்த ரொக்கெட்டை வடிவமைத்து வருகின்றது. புதிய தொழில்நுட்பத்துடனான 'வி.எக்ஸ்.200' என்ற என்ஜினை இந்த ரொக்கெட்டில் பொருத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர். இந்த என்ஜினை ரொக்கெட்டில் பொருத்தி, இயக்கினால் 39 நாட்களில் செவ்வாயை சென்றடையலாம். அது தற்போது பயன்பாட்டில் உள்ள ரொக்கெட்டுக்களைவிட பன்மடங்கு உந்து வேகத்தில் பயணிக்கக்கூடியது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது விண்வெளி ஆராய்ச்சிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற ரொக்கெட்டுக்களை இயக்க ஆண்டுக்கு சுமார் 7.5 டொன் எரிபொருள் தேவைப்படுகின்றது. அதுவே, புதிய ரொக்கெட்டுக்களை பயன்படுத்துவதனூடாக, செலவாகும் எரிபொருளின் அளவை 0.3 டொன்னாக குறைத்துக்கொள்ளமுடியும். இதன்மூலம் கோடிக்கணக்கில் பணமும் எரிபொருளும் செலவாவதைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

'ப்ளஸ்மா' ரொக்கெட்டானது ஓர் உந்துதலுக்குப் பின்னர் வருடக்கணக்கில் இயங்கும் திறனைப் பெற்றுள்ளது. நீராவியினால் இயங்கும் இதன் என்ஜின் நீரைக் கொதிக்க வைத்து, நீராவியை உருவாக்கிக்கொள்ளும் திறனுடையது. இதன் வேகமும் சாதாரண ரொக்கெட்டுக்களைவிட 100 மடங்கு அதிகமாக இருக்கும். இந்த ரொக்கெட்டை வடிவமைக்கும் நிறுவனம் நாஸாவுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி, 2013 ஆம் ஆண்டளவில் இதன் பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விண்வெளியில் இருந்து சூரியசக்தி சேகரிக்கப்படவுள்ளது

விண்வெளியில் இருந்து லேசர் மூலம் அல்லது மைக்ரோவேவ் மூலம் சூரிய சக்தியை சேகரிக்க ஜப்பான் திட்டமிட்டுள்ளது. 2030 ஆம் ஆண்டளவில் இந்த முயற்சியில் இறங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.இதற்கான திட்டமிடல்களை இப்போதிலிருந்தே ஜப்பான் மேற்கொண்டு வருவதாகவும் அதன் முதல் கட்டமாக சில கம்பெனிகளையும் ஆராய்ச்சியாளர்களையும் தேர்வு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சக்தி வளங்களில் சூரிய சக்தியே நிரந்தரமாகக் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது. தீர்ந்து விடாத, தூய்மையான வளமாகவும் இது கருதப்படுகின்றது. எதிர்காலத்தில் உலகில் எதிர்கொள்ளப்படவுள்ள எரிசக்தி நெருக்கடியை சமாளிக்க இது பெருமளவில் துணை புரியலாம் என்றும்,பூமியில் கிடைக்கும் சூரிய சக்தியைவிட விண்வெளியில் கிடைக்கும் சூரியசக்தி 5 மடங்கு வலுவானது என்றும் கருதப்படுவதனாலேயே ஜப்பான் இத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் திணை

கொழும்பு, கண்டி, நுவரெலியா போன்ற சில பிரதான நகரங்களில் காலை நேரத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் குதிரை மீது ஏறி சவாரி செய்யும் பொலிசார் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இது இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் குதிரைப் படைப்பிரிவின் கண்காணிப்புச் சேவையாகும். காலை 7.00 மணி முதல் 8.30 மணி வரையில் இந்த குதிரைப் படைப்பிரிவு சேவையில் ஈடுபடுத்தப்படுவதைக் காணலாம். இக்குதிரைப் படைப்பிரிவு பற்றி விரிவாகப் பார்ப்போம்

குதிரைப்படை ஆரம்பம்

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி செய்த காலத்தில் பொலிஸ் சேவையில் உயர் அதிகாரிகளின் பிரயாணங்களுக்காக குதிரைகள் பயன்படுத்தப்பட்டன. ஐரோப்பிய பாதுகாப்பு அதிகாரிகளைக் கொண்டு 1921 ஆம் ஆண்டு முதன்முதலாக குதிரைப்படையொன்று ஆரம்பிக்கப்பட்டது. பாதுகாப்புக் கடமைகளில் பொலிஸ் துறையில் முக்கிய அதிகாரிகள் அங்குமிங்கும் செல்லும் வாகனமாக குதிரைகள் பயன் படுத்தப்பட்டன.

இந்தப் படைப்பிரிவு கொழும்பில் இருந்து கண்டி, நுவரெலியா ஆகிய முக்கிய நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. பிரதிப் பொலிஸ் மா அதிபரின்(கொழும்பு பிராந்தியப் பொறுப்பு) கண்காணிப்பின் கீழ் இப்படைப்பிரிவு இயங்குகின்றது.

படைப்பிரிவுக்கு குதிரைகள்

பொலிஸ் குதிரைப்படைப் பிரிவுக்குரிய குதிரைகள் அவுஸ்திரேலியா, பிரான்ஸ், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து கொண்டு வரப்படுகின்றன. தற்போது இந்த குதிரைப் படைப்பிரிவில் 31 குதிரைகள் உள்ளன.

இப்பிரிவின் பணிகள்

இந்த குதிரைப் படைப்பிரிவின் பணியாக அமைவது முக்கியமான நிகழ்ச்சிகளின்போது ஏனைய அணி வகுப்பு மரியாதைகளுடன் குதிரைப் படை அணிவகுப்பு மரியாதையாக முன்னால் அணிவகுத்துச் செல்வது, காலை மற்றும் மாலை நேரங்களில் போக்குவரத்து கண்காணிப்புக்களை மேற்கொள்வது என்பனவாகும். இப்பணியை கொழும்பு, கண்டி, நுவரெலியா ஆகிய நகரங்களில் அவதானிக்கலாம். போக்குவரத்துப் பொலிஸாருக்கு பதிலாக குதிரைப் படை வீரர் ஒருவர் மஞ்சள் கோடு உள்ள வீதிக்கடவைக்கு அருகில் நின்று கண்காணிப்பை மேற்கொள் வார்.

அத்துடன், புதிதாக நாடாளுமன்ற அமர்வு நடைபெறும் நாளில் ஜனாதிபதி வருகையின்போது அணி வகுத்து செல்லல், சுதந்திர தினத்தன்று ஜனாதிபதியின் வருகையின்போது முன்னால் அணிவகுத்து ஜனாதிபதியை மேடைக்கு அழைத்து வருதல் போன்ற முக்கிய பணிகளி லும் குதிரைப்படை ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது.

இவற்றுக்கு மேலாக வெளிநாட்டுத் தலைவர்களின் வருகையின்போது முன்னே அணிவகுத்து அழைத்துச் செல்வது, வெளிநாட்டுத் தூதுவர்கள் சத்தியப் பிரமாணம் செய்கையில் அவர்களை ஜனாதிபதியின்முன் அழைத்து வருவது, அரச விழாக்கள், கலை நிகழ்ச்சிகள், சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றின்போது வெளிநாட்டு உல்லாசப் பிரயாணி களுக்கு போக்குவரத்து தகவல்களை வழங்குவது என்பனவும் இப்படைப் பிரிவின் முக்கிய பணிகளாகும்.

அதிகாரிகளை சேர்த்துக் கொள்ளல்

பொதுவாக பொலிஸ் சேவைக்குள் இருந்து இப்படைப்பிரிவுக்கான அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுகின் றனர். அவர்கள் முக்கியமாக மிருகங் களைப் பராமரிப்பதிலும் கண்காணிப் பதிலும் தேர்ச்சி பெற்ற விசேட திறன் பெற்றவர்களாக இருக்கவேண்டும். குறிப்பாக, குதிரை பராமரிப்பு மற்றும் சவாரியில் திறமை என்பன சிறப்புத் தேர்ச்சியாக கருதப்படுகின்றது. இச்சேவைக்கு தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரிகளுக்கு குதிரைப்படையில் சிறப்புப் பயிற்சியும், பயிற்சியின் முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

பயிற்சியின் சிறப்பு

- குதிரையின் முதுகில் ஏறி சவாரி செய்தல்.
- கடிவாளம் இல்லாமலும் வெறுமனே குதிரையின் முதுகில் அமர்ந்து சவாரி செய்தல்.
- குதிரையின் அசைவுகள், நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ளல்.
- குதிரைகளுக்கு ஏற்படும் நோய்களை அடையாளம் காணல், அவற்றுக்கு சிகிச்சையளித்தல் மற்றும் குதிரைகளைப் பராமரித்தல்.

இந்த படைப்பிரிவு அதிகாரிக ளுக்கு என்று தயாரிக்கப்பட்ட விசேட பதக்கம் மற்றும் தொப்பி, உடை என்பன உள்ளன. பதக்கத்தில் குதிரை யின் லாடத்திற்கு மத்தியில் குதிரைத் தலை பொறிக்கப்பட்டுக் காணப்படும்.

குதிரைகளுக்கு பயிற்சி

வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்படுகின்ற குதிரைகளில் பெரும் பாலானவை பயிற்சி பெறாதவையே. அவற்றைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமானதாகும். அவை மிகுந்த சிரமத்தின் பின்னர் தேவைக்கு ஏற்ப செயற்படும் விதமாக பயிற்சியளிக் கப்பட்டு நெறிப்படுத்தப்படுகின்றது.

பயிற்சி

குதிரைகளுக்கு தினமும் உடற் பயிற்சி வழங்கப்படுகின்றது. அவற் றுக்குத் தினமும் உடற்பயிற்சி வழங்கா விட்டால் வயிற்றில்Colicஎன்ற ஒருவகை நொதியம் சுரக்கும். இந்த நொதியம் காரணமாக குதிரை விரைவில் நோய் வாய்ப்பட்டு பலவீனம் அடைவ துண்டு. அதனால், தினமும் உடற்பயிற்சி முக்கியமாகும்.

பயிற்சிக் காலத்தில் குதிரையின் முதுகில் ஆட்சவாரிக்குப் பதிலாக மணல் மூடை களை ஏற்றி நடமாடச் செய்யப் படுகின்றது. பயிற்சியின்போது, நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ளச்செய்தல், வெவ்வேறு விதமான நடைகள் என்பன குதிரைக்கு பிரதானமாகும்.

- சாதாரண நடை.
- அணிவகுப்பு நடை.
- மெதுவாக (Walk) நடத்தல்.
- பாய்ந்து நடத்தல். (Cartary)
- பாய்ந்து பாய்ந்து ஓடுதல். (Galap) என்பன முக்கிய பயிற்சிகளாகும்.

இவ்வாறு இச்சேவைக் காக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய் யப்படுகின்ற குதிரை ஒன்றின் விலை 10 லட்சம் ரூபா வரையிலான பெறுமதி உடையதாகும்.

குதிரைப் பராமரிப்பு

தினமும் குதிரையின் உடல் நிலை கண்காணிக்கப்படல் முக்கியமாகும். காலநிலை குதிரையின் ஆரோக்கியத்தை பாதிப்ப தால் நோய்கள் தொற்றாமல் கண்கா ணிப்பில் வைத்திருப்பது முக்கியமா கும். சிகிச்சைகளின்போது குதிரை களுக்கான மருந்து வகை அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.

ஆரோக்கியம்: குதிரைகளின் சுகவாழ்வும் ஆரோக்கியமும் முக்கிய மானவையாகும். குறிப்பாக ஆரோக்கி யமான உணவு வகைகள் வழங்குவது முக்கியம். ஓடிஸ், பார்லி ஆகிய தானியங்கள் கலந்த உணவு வகை களே குதிரையின் பிரதான உணவா கும். கடும் உஷ்ணம் மற்றும் குளிர் காலங்களின்போது உணவு வகைகளிலும் மாற்றங்கள் நிகழும். குதிரை உணவு அவுஸ்திரேலியாவில் தயாரிக்கப்படுபவையாகும்.

அலங்கார உடை: ஒவ்வொரு வைபவத்தின்போதும் வெவ்வேறு விதமான உடைகள் குதிரைகளுக்கு அணிவிக்கப்படும். ஜனாதிபதி வரவேற்பு வைபவங்கள்,வெளிநாட்டு தலைவர்கள் ராஜதந்திரிகளை வரவேற்றல் போன்ற சந்தர்ப்பங் களில் குதிரை வீரரின் உடை சிவப்பா கவும் குதிரையின் முதுகில்

குதிரையின் உடல் பகுதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிப்பு சிவப்பு நிறமாகவும் இருக்கும். சாதாரண வைபவங்களின்போது குதிரை வீரரின் உடை வெள்ளை நிறமாகவும் குதிரையின் முதுகு விரிப்பு வெள்ளை நிறமாகவும் இருக்கும்.

முகத்தில் உள்ள சிறப்பு அடையாளம்

- நட்சத்திரம்
- கூர் வடிவம்
- பரந்த வடிவம்
- சிறிய புள்ளி

குதிரை நேரசூசி

குதிரைப் படைப்பிரிவின் செயற்பாட்டு நேரசூசியொன்று இருக்கின்றது. அதன்படியே நடவடிக்கைகள் தொடர்கின்றன.

காலை 5.00 மணி	- உணவு வழங்குதல்
7.30 மணி	- விசேடமாக அமைக்கப்பட்ட மணல் தரையில் பயிற்சி
காலை 8.30-9.00	- போக்குவரத்து கண்காணிப்பு. இப்பணிக்காக ஒரு தொகை குதிரைகள் வெளியே செல்லும்.
9.00-9.30	- ஓய்வு
9.30-11.00	- மசாஜ் செய்தல்.காயங்கள் இருந்தால் சிகிச்சை
11.00	- பகல் உணவு
1.15-3.00	- மீண்டும் மசாஜ்
3.00-4.00	- புல் வழங்குதல், வெளியில் பயிற்சி, தூய வளி சுவாசிக்க வெளியில் விடுதல்.
6.00	- உணவு
7.00	- நித்திரை

உறங்குவதற்கு வசதியாக 4 அங்குல அளவான மரத்தூள் மேடை ஒன்று அமைக்கப்பட்டிருக்கும். சில குதிரைகள் நின்று கொண்டும் உறங்கும்.

ணைகளத்தின் ரைப் படைப்பிரிவு

குதிரையின் சிறப்புப் பண்புகள்

உயரம் அமைவிடம்: குதிரைகளின் உயரம் ஹேன்ட் என்ற (Hands அளவீடு மூலம் கணிக்கப்படுகின்றது. ஹேன்ட் 1 என்பது பெருவிரல் தவிர்ந்த ஏனைய விரல்களின் அளவாகும். சுமார் 4 அங்குலம் வரையான அளவீடாகும். நன்றாக வளர்ந்த குதிரையொன்று ஹேன்ட் 16 ஐ விட உயரமாகும். இது சாதாரணமாக 11/2 அடி உயரம் வரை இருக்கும்.

நிறை: மாதந்தோறும் குதிரையின் பாரம் நிறுக்கப்படும். சாதாரண குதிரை 630-680 கி.கிராம் வரை எடையுடையதாகும். அவுஸ்திரேலிய குதிரைகள் 590 கிலோகிராம் வரை எடை உடையனவாகும்.

வயது: குதிரை ஒன்றின் ஆயுள் 25 வயதாகும். குதிரைகளைப் பயிற்றுவிப்பதற்கு தேர்ந்தெடுக்கும்போது அல்லது வளர்க்க எடுக்கும்போது அவை 3-4 வயதுக்குட்பட்டவைகளாக இருக்கவேண்டும்.

ஆர்வம்: குதிரைகள் எப்போதும் குறிப்பிட்ட சில சுவாத்திய நிலைகளை விரும்புவதாக உள்ளன. அதனால், அவற்றின் வாழ்விடம் காலத்திற்குக் காலம் மாற்றம் செய்யப்படுகின்றது.

குருதி: குதிரைகளை இடத்திற்கிடம் கொண்டு செல்லும்போது அதன் குருதியின் தன்மை கவனத்தில் கொள்ளப்படும். குளிர்ந்த மற்றும் சூடான நிலையில் குதிரையின் குருதி இருக்கும். இலங்கை போன்ற நாடுகளுக்கு குருதி உஷ்ண நிலையில் இருக்கும் குதிரைகளே பொருத்தமானவையாகும். அந்தந்த நாடுகளின் சுவாத்திய நிலைக்கு ஏற்ப இசைவாக்கம் அடைந்து ஆரோக்கியமாக வாழ்வதற்கே இவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றன.

பாதுகாப்பு: குதிரை எப்போதும் தமக்கு ஆபத்து என்று கருதும் சந்தர்ப்பங்களில் ஆபத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக கால்களைப் பயன்படுத்தும். பின்னால் செல்பவர்களை முன்னறிவித்தல் இல்லாமல் திடீர் என்று பின்னங்கால்களால் உதைத்து தம்மை பாதுகாத்துக் கொள்ளும். குதிரை வீரரும்கூட குதிரைக்கு அருகில் செல்லும்போது முன்னறிவித்தல் செய்து குதிரையின் பிடரியை தடவியவாறே அருகில் செல்வார். குதிரையை அடையாளம் காண்பதற்காக உடலில் சில பண்புகள் காணப்படும்.

பெயர்: தனித்தனியாக குதிரைக்கு பெயரிடல் நடைபெறுகின்றது. ஆனால், அந்த பெயர் கொண்டு அழைத்தாலும் வெளிப்படையாக குதிரை விளங்கியதாக காட்டிக்கொள்வதில்லை. அதனால், பெயர் சூட்டல் வெறும் அடையாளத்திற்கு மட்டுமேயாகும்.

முகத்தில் காணப்படும் அங்க லட்சணம்:

- நட்சத்திர அடையாளம் (Star)
- வரி (Strip)
- சிறு புள்ளிகள் (Ship)
- விரிவான கோடுகள் (Blaze)
- வெள்ளை நிறமுகம் (Whitefau)
- உதடுகள் (Lip)

காலில் அடையாளம்:

- காலில் பாதத்திற்கு அருகில் விசேடமான வடிவம். (Frmine)
- இது சிறிய மேஸ் அணிந்தது போன்று காணப்படும்.
- வரிக்குதிரை போன்ற பாத அமைப்பு. (Zebra)

பாதத்திற்கு லாடம் இடல்: குதிரையின் பாதத்தின் அடிப்பகுதிக்கு லாடம் இடப்படுகின்றது. குதிரையின் பாதத்தின் அடிப்பகுதி விசேடமாக அமைந்த தடிப்பான தட்டாகும். அதில் சதை இல்லை. ஓடு போன்ற அமைப்புகாணப்படுகின்றது. அந்த தட்டு நடக்கும்போது விரைவில் தேய்ந்து பழுதாகக் கூடியதாகையால் பாதுகாப்புக்காக தடிப்பான உலோக லாடம் பொருத்தப்படும். அதனால், பாதத்திற்கு உரிய பாதுகாப்பு கிடைக்கின்றது.

லாடம் வகைகள் (நகம்):

- டயமன் லாடம் (Diamond Toe)
- ஹன்டார் ஹய்ன்ட் (Hunte Hind)
- புலட் அன்ட் சீட் (Fullered Seated)
- கெப்ஷேட் (Cap Shaped)
- ஜீ வடிவம் (G.Shaped)
- ரேசிங் சப்பாத்து (Racing Shoe)
- ரொகர் பார் (Rocker Bar)



சவாரி செய்யும் முறை

குதிரை இனம்

குளியல் | குதிரை லாயம் | குதிரையை கொண்டு செல்லும் வாகனம் | குதிரையின் முதுகை சுத்தப்படுத்தும் உபகரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரவத்துளி ஏன் கோள வடிவில் இருக்கிறது?

பொதுவாக எல்லா திரவங்களும் துளியாக தனித்த நிலையில் இருக்கும்போது கோள வடிவிலேயே இருக்கின்றன. இதற்குக் காரணம், அதன் பரப்பு இழுவிசை (Surface tension) ஆகும். திரவ மட்டத்தின் மையத்திலுள்ள மூலக்கூறுகள் (Molecules) சுற்றிலும் உள்ள மூலக்கூறுகளை கவர்ந்திழுக்கும். இதன்போது, குறித்த திரவத்துளி மேலிருந்து கீழ்நோக்கி விழுகின்றது. அதனால் கீழ்ப்பக்கம் அதிகம் இழுபடுகின்றது. இதன்போதே கோள வடிவம் உண்டாகிறது.



திரவங்களின் தன்மையைப் பொறுத்து, அதன் பரப்பு இழுவிசையின் பங்கு வேறுபடும். தண்ணீருக்கும் பாலுக்கும் தேனுக்கும் பரப்பு இழுவிசை வேறுபடுவதால், தண்ணீரைச் சுண்டியெறியும்போது ஏற்படுமளவு கோள வடிவம், பிற திரவங்களைச் சுண்டியெறியும்போது உண்டாவதில்லை. திரவ உலோகங்களில் பாதரசத்தின் பரப்பு இழுவிசைதான் பிற திரவங்களின் இழுவிசையைவிட அதிகமாகும்.

பிரதான உறுப்பு





கி.பி 150 ஆம் ஆண்டில் வாழ்ந்த கெல்லன் என்ற விஞ்ஞானி, உடலின் குருதி ஓட்டத்தை கல்லீரலே நிர்வகித்து வருகிறது என்று கூறியிருந்தார். அதன்படி, 17 ஆம் நூற்றாண்டு வரை எமது உடலின் பிரதானமான உறுப்பாக கல்லீரல்தான் கருதப்பட்டு வந்துள்ளது. எனினும் காலப்போக்கில், வில்லியம் ஹார்வே என்ற விஞ்ஞானி குருதிச் சுற்றோட்டத்தைக் கண்டறிந்து, குருதி சுத்திகரிப்புப் பணிகள் இருதயத்திலேயே நடைபெறுகின்றன என்றும் சுத்திகரிக்கப்பட்ட குருதியை உடலெங்கும் அனுப்பி வைப்பதும் இருதயம்தான் என்றும் உறுதிப்படுத்தியதை அடுத்தே, எமது உடலின் பிரதான உறுப்பாக இருதயம் கருதப்படலாயிற்று.

என்னது புல்.....லா?

பயிர் நிலங்களிலும் ஏனைய இடங்களிலும் ஒரு களையாகத்தான் 'புல்' இனங்காணப்படுகின்றது.புல்லில் மொத்தம் 4500 வகைகள் உள்ளனவாம். அந்தவகையில்; கோதுமை,அரிசி, பார்லி, ஓட்ஸ்,மூங்கில், கரும்பு போன்றவையும் புல் இனத்தைச் சேர்ந்தவையே.

கிளையுள்ள செடி

'சைனீஸ் விஸ்டீரியா' (Chinese Wisteria) என்பது ஒரு செடியின் பெயர். அமெரிக்காவின் கெலிஃபோர்னியா மாநிலத்தில் பெருமளவில் வளரக்கூடிய இந்த தாவரத்தில் அதிகளவு கிளைகள் உள்ளன. இந்தக் கிளைகள் அதிகபட்சமாக 150 மீற்றர் நீளமுள்ளவை. கிளைகள் இருந்தாலும் இதனை 'செடி' என்றுதான் வகைப்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் செடியில் ஆண்டுக்கு சராசரியாக 5 லட்சம் பூக்கள் பூக்கின்றன.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அனைவருக்கும் 'விஜய்' பத்திரிகை வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது

2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் எம்.ஐ.எஃப்.சாரா, 167 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.இஸ்மாயில்-எஸ்.ஹஸீனா தம்பதியரின் புதல்வியாவார்.

பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் ஃபாத்திமா ஹனா, 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.அறபா-யூ.ஹினாயா தம்பதியரின் புதல்வியாவார்.

பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் ஷைபுல் இஸ்லாம், 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.சாஜஹான் அஸ்கின்-பி.சிஹாரா தம்பதியரின் புதல்வராவார்.

களு/அலவியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.எச்.இனாமுல் ஹஸன், 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.ஹுஸைன்-முனீரா தம்பதியரின் புதல்வராவார்.

களு/அலவியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஃபாத்திமா இல்மா, 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.ஹனீம்-எஃப்.பாயிஸா தம்பதியரின் புதல்வியாவார்.

யா/ஸ்கந்தவரோதயா கல்லூரியில் கல்வி கற்கும் (முன்வரிசை-இடமிருந்து வலமாக) அ.நிரூஷா-144 புள்ளிகள், கு.கீர்த்தனா-161 புள்ளிகள், ச.சபிதன்-178 புள்ளிகள், வி.தனுஜன், ப.துவாரகா ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். இவர்கள், பாடசாலை அதிபர் உட்பட ஆசிரியர்களுடன் இருப்பதையே படத்தில் காண்கின்றீர்கள்.

களு/அலவியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.எஃப்.எம்.பைஸான், 142 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.பௌசி-எஃப்.நிலூபா தம்பதியரின் புதல்வராவார்.

கே/மாவ/பள்ளிப் போர்வ முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.என்.எம். நபீல், 142 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

மள்வானை, அல்-முபாரக் தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் என்.எஃப்.பேகம், 162 புள்ளிகளைப் பெற்றுள்ளதுடன், பாடசாலையில் சிறந்த புள்ளிகளைப் பெற்றவராகத் திகழ்கின்றார். இவர், இக்பால் நௌஷாத்-எஃப்.ஷர்மிளா ஆகியோரின் புதல்வியாவார்.

கே/மா/நூராணியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.ஆர்.ஆமினா, 142 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.ரம்ஸீல்-எஃப். ரெஜியா ஆகியோரின் புதல்வியாவார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் அ.கபீர்த்தன், 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கு.அரசேஸ்வரன்-அ.சர்மிளா தம்பதியரின் புதல்வராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறம் மாறும் 'டைனோசரஸ்' குடும்ப உறவினர்கள்

இயற்கையோடு ஒட்டி வாழக்கூடிய இயற்கைச் சூழலுக்கு ஏற்ப இசைவாக்கம் அடையும் ஊர்வன இனங்களில் ஓணானும் ஒன்றாகும்



புள்ளி ஓணான்

ஓரளவு நீளமானதும் உடம்பின் மேற்பரப்பில் தழும்புகள் போன்று புள்ளிகளும் காணப்படும் (Calotes desilvai) ஓணான் வகையே 'புள்ளி ஓணான்' இனமாகும். தலைக்கு கீழ் பிடரியில் மேல்நோக்கியவாறு முட்கள் (கூர்) காணப்படுகின்றன. உடம்பு ஊதா, சிவப்பு, மஞ்சள் நிறங்களில் உள்ளன. சாதாரண உயரமான அடர்த்தியான மரங்களில் அதாவது,தரை மட்டத்தில் இருந்து 5-30 அடி வரையான உயரத்தில் இவை வாழ்கின்றன. கிழக்கு மாகாணக் காடுகளிலும் இறக்வான மலைச்சாரல் பகுதிகளிலும் இவை அதிகமாகக் காணப்படுகின்றன. பெண் ஓணான் முட்டையிடுவதற்கு மட்டும் தரைக்கு வருகின்றது.

முள் ஓணான் (Cophotist)

முள் ஓணான் இனம் 'கூறு ஓணான்' என்றும் அழைக்கப்படுகின்றது. இவையும் பற்றைகளுக்குள் மறைந்து வாழ்கின்றன. இதற்கு நீண்ட வால் இருக்கின்றது. வாலின் உதவி கொண்டே இவை சிறிய பூச்சிகளை கௌவிக்கொள்கின்றன. இவற்றில் இரண்டு இனங்கள் உள்ளன.

இரண்டாவது வகை முள் ஓணான்

இதன் நீளம் 57 மி.மீற்றர்களாகும். ஒழுங்கில்லாத விதமாக உடலில் ஆங்காங்கே கோடுகள் பல காணப்படுகின்றன. நன்றாக வளர்ந்த ஆண் ஓணானின் தலை கூர் போன்று இருக்கும். இவை வெளியில் முட்டை இடுவதில்லை. இதன் கருப்பைக்குள் முட்டை வளர்ந்து அவற்றில் இருந்து தானாகவே குட்டிகள் வெளிவருகின்றன. இரையை பலமாகப் பற்றிப் பிடிப்பதற்கு இவ்வகை ஓணானின் வால் உதவியாக இருக்கின்றது.

பாசி படர்ந்த மரங்களில் இவை அதிகமாக வாழ்கின்றன. கடல் மட்டத்தில் இருந்து 1300 மீற்றர்களுக்கு மேல் உயரமான மரங்களில் இவை வாழ்கின்றன.

தும்பரை முள் ஓணான்

'தும்பரை' என்ற ழைக்கப்படும் இவை 'நக்கில்ஸ்' மலைத் தொடர் காடுகளில் வாழ்கின்றன. ரிவஸ்டன் என்ற தோட்டத்தில் இருந்தே முதன்முறையாக இவ்வகை ஓணான்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கடல் மட்டத்தில் இருந்து 1435 மீற்றர் உயரமான மரங்களில் இவை வாழ்கின்றன. ஏனைய இரண்டு வகையான முள் ஓணான் வகையை ஒத்ததாகவே இவையும் உள்ளன. இவற்றின் உடம்பில் பட்டை போன்ற செதில் அமைப்பில் பச்சை, மஞ்சள் நிறங்கள் காணப்படுகின்றன. இவை 51.9 மி.மீற்றர் முதல் 55.9 மி.மீற்றர் வரை நீளமானதாகும்.

வளைவு வாய் ஓணான் (Lyrioephalus)

இவையும் பற்றைகளுக்குள் வாழ்கின்றன. உடம்பில் தழும்புகள் உள்ளன. மரத்தில் சுருண்டு கொண்டு காணப்படும். இவை இலங்கையில் மட்டும் காணப்படுபவையாகும்.

கழுத்தில் பை ஓணான் (Lyriocephalus Scutatus)

இவை 116 மி.மீற்றர் அளவு நீளமானவையாகும். நன்றாக வளர்ந்த ஓணானின் உடம்பில் தடிப்பான முட்கள் உள்ளன. இதன் முதுகில் தடிப்பான முட்களும் வளைந்த வாயும் காணப்படுவதால் வேதாளம் உருவம் இதற்கு இருக்கின்றது. இருள் சூழ்ந்த அடர்ந்த மரங்களில் அதிகமாக வாழ்கின்றன. எதிரிகளிடம் இருந்து பாதுகாப்புப் பெற மரக்கொப்புகளில் (கிளைகளில்) ஒட்டியவாறு மறைந்து வாழ்கின்றன.



எதிரிகளைக் காணும்போது சற்றுப் பருமனாகி விகாரமான தோற்றத்தை வெளிப்படுத்தும். இதன் கழுத்துக்குக் கீழ் ஒரு பை போன்ற அமைப்புக் காணப்படும். பச்சை, மஞ்சள் நிறங்களை சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப வெளிக்காட்டும். அவ்வாறும் தப்பிக் கொள்ள முடியாவிட்டால் மரத்தில் இருந்து கீழே விழுந்து இறந்தது போன்று சுருண்டு கொண்டு இருக்கும். கடல் மட்டத்தில் இருந்து 1650 மீற்றர் அளவு உயரத்தில் இருக்கும். இந்த உயரத்தில் உள்ள அடர்த்தியான காடுகளில் இவை வாழும்.

மணல் ஓணான் வகை (Sitana)

இவையும் தரையில் வாழ்வனவாகும். இவ்வகை ஓணானின் பின்னங் கால்கள் நீளமானதாக இருக்கும். அதனால் மிக வேகமாக நிலத்தில் ஓடமுடியும். ஆண் ஓணானின் கழுத்துக்குக் கீழ்ப்பகுதியில் தடிப்பான உறை அமைப்பு இருக்கும். இதில் ஒரு இனம் மட்டுமே இருக்கின்றது. அதுவும் இலங்கையில் மட்டும் காணப்படுவதாகும்.

தடிப்பான புள்ளி மணல் ஓணான்



இவை 50 மி.மீ அளவு வரை நீளமானவை. இதன் ஆண் ஓணானின் பாதத்தில் 4 விரல்கள் உள்ளன. எதிரிகளைக் காணும்போது எழுந்து இரண்டு கால்களை ஊன்றி கழுத்தை உயர்த்தி அமைதியாக அசையாமல் நின்றுவிடும். நிலத்தில் வாழ்வதனால் மண்நிறமாக இருக்கும்.

அகன்ற செதில் ஓணான்

68 மி.மீ அளவு நீளம் கொண்ட தடிப்பான கழுத்தை உடைய ஓணான் வகை இதுவாகும். இதன் கழுத்துக்குக் கீழ் உறை போன்ற அமைப்புக் காணப்படுகின்றது. பகலில் வெளியில் நடமாடும். இவை இரவில் பற்றைகளுக்குள் மறைந்து வாழும்.

பற்றை, காய்ந்த சருகுகளின் நிறத்தை ஒத்த நிறம் கொண்ட இவற்றை எதிரிகள் இலகுவில் கண்டு கொள்வதில்லை. தாழ்நில ஈரவலயப் பிரதேசங்களில் இவை பரவலாகக் காணப்படுகின்றன. கடல் மட்டத்தில் இருந்து 1200 மீற்றர் உயரத்தில் இவை வாழ்கின்றன. அனைத்து வகையான ஓணான்களும் எதிரிகளைக் காணும்போது அல்லது ஆபத்து நிகழும் என்று கருதும்போது எச்சரிக்கையாக செயற்படுவதோடு தேவைக்கேற்ப தமக்குரிய இயல்புகளையும் வெளிப்படுத்துகின்றன. அத்துடன், இவற்றின் முகத்தோற்றம் டைனோசர்களை ஒத்ததாக இருப்பதால் இதனை டைனோசர் குடும்ப உறவினர்கள் என்று அழைப்பதும் உண்டு.

தட்டை ஓணான் வகைகள்

இந்த தட்டை ஓணான்கள் இரண்டு வகையாகும். இவை நிலத்தில் வேகமாக ஓடக்கூடியவை. ஓடும்போது முன்னங்கால்களை உயர்த்திக் கொண்டு பின்னங்கால்களால் வேகமாக ஓடும் ஆற்றல் பெற்றவை. சாதாரணமாக 'டைனோசரஸ்' குடும்பத்தின் தோற்றம் இதற்குண்டு.

தட்டையான ஓணான்

இவ்வகை ஓணான் எமது நாட்டில் அதிகமான பிரதேசங்களில் காணப்படுகின்றன. இதன் கழுத்தின் கீழ்ப்பகுதியில் தடிப்பான பை போன்ற அமைப்புக் காணப்படுகின்றது. குறிப்பாக வறண்ட வலயப் பகுதிகளில் தரையில் வாழக்கூடிய இவ்வகை ஓணான்கள் தட்டையான உடல் அமைப்பைக் கொண்டவையாகும். இவை அடர்ந்த பற்றைகளுக்கு கீழ் உள்ள இருண்ட இடங்களில் வாழ்கின்றன.

இவை மண் நிறத்தை உடையனவாகவே காட்சியளிக்கும். எதிரிகளைக் காணும்போது பின்னங்கால்களை நிலத்தில் ஊன்றி முன்னங்கால்களை உயர்த்தி நிற்கும். அப்போது கழுத்திற்கு கீழ் உள்ள உறைக்குள் காற்று வரும்போது அந்த உறை விரிவடைந்து நிலத்தில் படும். அந்தச் சந்தர்ப்பத்தில் தனது பலத்தை வெளிப்படுத்தி எதிரியை துரத்தி பாதுகாப்புப் பெறும்.

அமீர் ஹுஸைன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மெனிலா நகரின் ஒரு பகுதி

வாரம் ஒரு நாடு

பிலிப்பைன்ஸ்

அரசு: இரு சட்ட அவைகள்கொண்ட பல கட்சிக் குடியரசு.
சுதந்திரம்: ஸ்பெய்னிடமிருந்து பிரகடனம்-1898 ஜூன் 12.
நிகழ்கால அரசியலமைப்பு: 1987 பெப்ரவரி 2.
தேசிய பெயர்: Republika ng Pilipinas-பிலிப்பைன்ஸ் குடியரசு. (Republic of the Philippines).
அமைவிடம்: போர்னியோவின் வடகிழக்கிலும் இந்தோனேஷியாவின் வட்கிழக்கிலுமாக மேற்கு பசுபிக் பெருங்கடலில் பரவிக் கிடக்கும் தீவுக்கூட்டங்களின் தொகுதி.
ஜனாதிபதி (2001): குளோரியா மகாபகல் அரோயா.
உப ஜனாதிபதி: நொலி டி கெஸ்ட்ரோ.
தேசிய இனம்: ஃபிலிபினோ அல்லது பினோய்.

புவியியல்

சுமார் 7000க்கும் மேற்பட்ட தீவுகளைக்கொண்ட பிலிப்பைன்ஸ், தென்கிழக்கு ஆசிய பெருநிலப்பரப்பில் இருந்து ஏறக்குறைய 500 மைல் (805 கி.மீற்றர்) தூரத்தில் அமைந்துள்ளது. மொத்தத் தீவுக் கூட்டங்களில் 7% மானவை பெரிய தீவுகளாகும். அவற்றில் 1/3 பங்கு தீவுகளுக்கே பெயர்கள் உண்டு. பல எரிமலைகளைக் கொண்ட நாடாகவும் பூகம்பங்களைச் சந்திக்கும் நாடாகவும் உள்ளது. 'ககாயன்', இந்நாட்டின் மிக நீளமான ஆறாகும். அது 217 மைல் (350 கி.மீற்றர்) நீளமானதாகும். தவிர, பாம் பங்கா, அப்ரா, அனுஸான், கைகோல், கிகோ என்பனவும் குறிப்பிடத்தக்க ஆறுகளாகும்.

மொத்தப் பரப்பு: 115,830 ச.மைல் (300,000 ச.கி.மீ); **நிலப்பரப்பு:** 115,124 ச.மைல் (298,171 ச.கி.மீ) **நிலப் பிரிவுகள்:** 79 மாகாணங்கள் மற்றும் 115 அதிகாரபூர்வ நகரங்கள்.
தலைநகரமும் பெரிய நகரமும்: மெனிலா.
ஏனைய பெரிய நகரங்கள்: கியூசன், செபு, டவாயோ.
மிக உயரமான சிகரம்: அபோ சிகரம். (9692 அடி).
மிகத் தாழ்ந்த மையம்: பிலிப்பைன்ஸ் கடல்.
சனத்தொகை (2009): 97,976,603. **நாணயம்:** பெஸோ.
மொழிகள்: ஃபிலிப்பினோ, ஆங்கிலம் (இரண்டும் அலுவலக மொழி), மேலும் எட்டு பிரதான பிரதேச மொழிகள்.அவையாவன: டகாலொக், செபியுயனோ, லொகானோ, ஹிலிகைநொன் அல்லது லோங்கோ, பிக்கோல்,வராய், பம்பன்கோ, பங்கசினென்ஸ்.
இனங்கள் (2000): டகாலொக் 28%, செபியானோ 13.1%, லொக்கானோ 9%, பிஸாயா/பினிஸாயா 7.6%, ஹிலிகைநொன் லோன்கோ 7.5%, பிக்கோல் 6%, வராய் 3.4%, ஏனையவை 25.3%.
சமயங்கள்: ரோமன் கத்தோலிக்கம் 81%, இவேன்ஜெலிக்கல் 3%, இக்லெஸியானி கிரிஸ்டோ 2%, அக்லிபயன் 2%, ஏனைய கிறிஸ்தவர்கள் 5%, இஸ்லாம் 5%.
எழுத்தறிவு வீதம் (2003): 96%.
இணையத்தளக் குறியீடு: .ph
சர்வதேச தொலைபேசி இலக்கம்: 63
தேசிய சின்னங்கள்: பறவை- **Philippine Eagle**, **மிருகம்**-Carabao (நீர் எருமை), **மரம்**- **narra**, **மலர்**-**sampaguita** (அரேபியன் மல்லிகை).

தேசிய கீதம்

Bayang magiliw,
Perlas ng Silanganan
Alab ng puso,
Sa Dibdib mo'y buhay.....என ஆரம்பமாகின்றது.

வரலாறு

கி.மு 2500 ஆம் ஆண்டளவில் ஆசிய நிலப்பரப்பில் இருந்தும் கி.மு 3000 ஆண்டளவில் இந்தோனேஷியாவில் இருந்தும் மலேசியாவில் இருந்தும் வந்து மக்கள் இங்கு குடியேறினர். ஸ்பெய்னில் 2 ஆம் பிலிப் மன்னன் ஆட்சிக்காலத்தில் ஸ்பானியரால் பிலிப்பைன்ஸ் கைப்பற்றப்பட்டு, ஏறக்குறைய 350 வருடங்கள் ஸ்பானியரின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. அதன்பின், ஸ்பெனிஷ்-அமெரிக்க போரைத் தொடர்ந்து 1898 இல் அமெரிக்காவின் ஆதிக்கத்திற்குட்பட்டது. 1934 இல் சுயாட்சி வழங்கப்பட்டது. 1941 இல் ஜப்பானால் கைப்பற்றப்பட்டு, 1946 இல் விடுதலை பெற்றது. 1965 முதல் 1986 வரை பேர்டினன்ட் மார்க்கோஸின் ஆட்சி அமைந்தது. மார்க்கோசுக்கு எதிரான மக்கள் போராட்டத்தை அடுத்து ஜனநாயக ஆட்சி அமைந்தது. 1998 இல் அதிபரான ஜோசப் எஸ்ட் ராடா ஊழல் குற்றச்சாட்டுகளை அடுத்து ராஜினாமா செய்தார். தொடர்ந்து துணை அதிபராக இருந்த குளோரியா மகாபகல் அரோயா ஜனாதிபதியானார்.

ஜனாதிபதி

உப ஜனாதிபதி

கலாசாரம்

மேற்குலக மற்றும் கீழைத்தேய கலாசாரங்கள் இணைந்ததே பிலிப்பைன்ஸ் கலாசாரமாகும். அவற்றுள் மலேசிய, சீன கலாசாரங்களுடன் அமெரிக்க, ஸ்பானிய மற்றும் மெக்ஸிகோ கலாசாரங்களின் தாக்கங்களையும் பெருமளவில் காணலாம்.

பொருளாதாரம்

விவசாயம் (பயிர்ச்செய்கைக்கேற்ற நிலம் 19%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கரும்பு, தென்னை, நெல், சோளம், வாழைப்பழங்கள், அன்னாசி, மாங்கனிகள், பன்றி, முட்டைகள், மாட்டிறைச்சி, மீன் வகைகள். **தொழிலாளர் தொகை** (2007): 36.22 மில்லியன் (இதில் விவசாயம் 35%, கைத்தொழில் 15%, சேவைகள் 50%). **வேலையற்றோர்:** 7.3%. **கைத்தொழில்கள்:** இலத்திரனியல் பொருட்கள், ஆடைக்கைத் தொழில், பாதணிகள், மருத்துவப்பொருட்கள், ரசாயனப் பொருட்கள், மரத்தளபாட உற்பத்தி, உணவுப் பொருட்கள், எண்ணெய் சுத்திகரிப்பு, மீன்பிடிக் கைத்தொழில். **இயற்கை வளங்கள்:** மரங்கள், பெற்றோலியம், வெள்ளி, தங்கம், செம்பு, உப்பு, செம்பு, நிக்கல் என்பன. **ஏற்றுமதிகள்:** இலத்திரனியல் உபகரணங்கள், இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், தைத்த ஆடைகள், தென்னை உற்பத்திகள், பழங்கள், செம்பு உற்பத்திகள், ரசாயனப் பொருட்கள். **இறக்குமதிகள்:** மூலப்பொருட்கள், எரிபொருட்கள், வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள், பிளாஸ்டிக், தானியங்கள்.
முக்கிய வர்த்தகப் பங்காளிகள்: ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, நெதர்லாந்து, ஹொங்கொங், சீனா, சிங்கப்பூர், தாய்வான், மலேசியா, தென் கொரியா.

தொடர்பாடல்

தொலைபேசிகள்: பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் (2006): 3.633 மில்லியன்; **செல்லிடத் தொலைபேசிகள்** (2006): 42,869 மில்லியன். **வானொலி நிலையங்கள்:**AM 381, FM 628, SW 4. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்:** 250 (அத்துடன் 150 கேபல் அலைவரிசைகள்).
இணையத்தள வழங்குனர்கள்: 271,609. இணையத்தளப் பாவனையாளர்கள் (2005) : 4,615 மில்லியன்.

போக்குவரத்து

புகையிரதப்போக்குவரத்துப் பாதைகள்: 897 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்:** 200037 கி.மீற்றர். **நீர்வழிப்போக்குவரத்து:** 3219 கி.மீற்றர். **துறைகளும் துறைமுகங்களும்:** பட்டாங்காஸ், காகயன் டி ஒரோ, செபு, டவாயோ, கைமரஸ் தீவுகள், லிகன், லோய்லோ, ஜோலோ, லெகாஸ்பி, மெனிலா, மாஸாவோ, போர்ட்டோ பிரின்சிசா, சென் பெர்னான்டோ, சுபிக்குடா, ஸாம்போவாங்கா. **விமான நிலையங்கள்:** 255.

பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

* சொகலேட் குன்றுகள் * காஸா மெனிலா
* தென்னை மாளிகை * பாக்கோ-பார்க் * செபு பிலிப்பைன்ஸ் (இது நாட்டின் மிகப் பழமையான நகரமாகும்)
* ஓலன்கோ சரணாலயம்.

சொகலேட் குன்றுகள்

செபு துறை

தென்னை மாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 4 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்கான தமிழ் மாதிரி வினாத்தாள்

★ பின்வரும் உரைப்பகுதியை வாசிக்க.

ஆதிகாலத்தில் திறந்தவெளிகளில் மனிதர்கள் வசித்து வந்தார்கள். பின்னர் குகைகளில் வசிக்கக் கற்றுக்கொண்டார்கள். அவர்கள் கற்களைக் கூர்மையாக்கி அதை ஒரு தற்காப்பு ஆயுதமாகப் பயன்படுத்தி வந்தார்கள். அந்தக் கூர்மையான கல் ஆயுதமே மனிதர்களின் முதல் எழுதுகோலாகும். இந்தக் கூரிய கல்லை எழுதுகோலைப் போல் பயன்படுத்தி தாங்கள் வசித்த குகைச் சுவர்களில் சித்திரங்களை வரைந்தார்கள். அந்த சித்திரங்கள் அவர்களின் தினசரி வாழ்க்கையையும் வேட்டையில் அடைந்த வெற்றிகளையும் குறிப்பிடுவதாக அமைந்தன.

இவ்வுரைப்பகுதியைக்கொண்டு 01 தொடக்கம் 06 வரையிலான வினாக்களுக்கு விடைகள் தருக.

01. ஆதிகால மக்கள் முதலில் எங்கே வசித்தார்கள்?.....
02. அவர்கள் எதனைத் தற்காப்பு ஆயுதமாகப் பயன்படுத்தினார்கள்?.....
03. மனிதர்களின் முதல் எழுதுகோல் எது? .....
04. ஆதிகால மக்கள் எங்கே சித்திரங்களை வரைந்தார்கள்?.....
05. அவர்களுடைய சித்திரங்கள் எவற்றைச் சித்தரிக்கின்றன?.....
06. 'அவர்கள்' என்பதன் ஒருமைச் சொல் எது?.....

✱ கட்டங்களுக்குள் இருக்கும் எழுத்துக்களிலிருந்து பொருத்தமான எழுத்தைத் தெரிவு செய்து பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துக.

ழ	ள	ல	ன	ழை	ண	ல்	ள்	லை	ளை

07. அ.....ப்பிதழ் 08. வெ.....ளப்பெருக்கு
09. பல்கலைக்க.....கம் 10. சந்த.....ம்

★ தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிலும் நான்கு சொற்களில் மூன்று சொற்கள் ஏதோ ஒரு விதத்தில் ஒத்துள்ளன. ஒரு சொல் வித்தியாசமானது. வித்தியாசமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

11. (1) கண் (2) நயனம் (3) அலர் (4) விழி
12. (1) கதிரவன் (2) சூரியன் (3) சந்திரன் (4) பகலவன்
13. (1) கடை (2) மனை (3) வீடு (4) அகம்
14. (1) நித்திரை (2) துயில் (3) உறக்கம் (4) விழிப்பு

★ கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிலும் உள்ள முதல் இரு சொற்களையும் அவதானித்து, மூன்றாவது சொல்லுக்குரிய நான்காவது சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

15. நாய் ⟶ குரைக்கும், மயில் ⟶ .....
(1) உறுமும் (2) அழும் (3) குறுகுறுக்கும் (4) அகவும்
16. யானை ⟶ களிறு, நாய் ⟶ .....
(1) கலை (2) கடுவன் (3) கடர் (4) பெட்டை
17. வாழை ⟶ குட்டி, நெல் ⟶ .....
(1) கன்று (2) வடலி (3) நாற்று (4) பிள்ளை

★ வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

18. பரீட்சையில் சித்தியடைந்த நிசாட் ..... அடைந்தான்.
(மகிள்ச்சி/மகிழ்ச்சி/மகில்ச்சி)
19. உலகின் தலைசிறந்த ..... சோக்கிரட்டீஸ்.
(சிந்தணையாளர்/சிந்தனையாலர்/சிந்தனையாளர்)
20. ஒருவரையும் ..... சொல்ல வேண்டாம்.
(பொல்ளாங்கு/பொல்லாங்கு/பொழ்ளாங்கு)

★ பின்வரும் வாக்கியங்களை வாசித்து, உரிய இடத்தில் நிறுத்தற்குறிகளை இடுக.

21. ஐயா பாபு வழுக்கி விழுந்து விட்டான்
22. மென்லோ பூங்கா மந்திரவாதி என அழைக்கப்பட்ட மனிதரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா

★ பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

23. திகைத்துப்/அசையாமல்/போய்/பேரனும்/சிறிது/தாத்தாவும்/நின்றனர்/நேரம்
.....
24. குருவிடம்/சென்று/சீடன்/கூறினான்/தனக்கு/நடந்தவற்றைக்
.....

★ பின்வரும் பழமொழிகளின் கருத்துக்களை எழுதுக.

25. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
.....
26. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
.....

★ பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

27. பறவை இரை தேடி வானில் பறந்தது.
.....
28. நான் அழகாக ஓவியம் வரைவேன்.
.....
29. மனிதன் மிகவும் இரக்க சுபாவம் உடையவன்.
.....

★ பின்வரும் இறந்தகால வாக்கியங்களை நிகழ்கால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

30. சாந்தியும் மாலாவும் கோயிலுக்குச் சென்றார்கள்.
.....
31. மான் குட்டி துள்ளித் துள்ளி ஓடியது.
.....

★ கீழே தரப்பட்டுள்ள இரு வாக்கியங்களை ஒரு வாக்கியமாக மாற்றி எழுதுக.

32. குமார் நூலகத்துக்குச் சென்றான்.
கஜன் பாடசாலைக்குச் சென்றான்.
.....

★ பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக.

33. நாங்கள் மாலை வேலையில் விழையாடுவோம்.
.....
34. கண்ணன் விழா மரத்தில் ஏறும்போது சறுக்கி விலுந்தான்.
.....

★ பின்வரும் படத்தை அவதானித்து, நிகழ்காலத்தில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தபட்சம் ஐந்து சொற்களேனும் இடம்பெறல் வேண்டும். (எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக இருத்தல் வேண்டும்)

35. .....
.....
36. .....
.....
37. .....
.....
38. .....
.....
39. .....
.....
40. .....
.....

விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்

கடந்த வாரம் பிரசுரமான கணித மாதிரி வினாத்தாளுக்கான விடைகள் 15ஆம் பக்கத்தில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிள்ளைகளின் பொது அறிவுத் திறன் மிகவும் குறைவான மட்டத்தில் உள்ளதாக கல்வியியலாளர்கள் கருதுகின்றனர். இந்நிலை பிள்ளைகளின் வாசிப்புத்திறனில் ஏற்பட்டுள்ள பின்னடைவை வெளிக்காட்டுவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதற்குக் காரணம், பிள்ளைகள் புத்தகங்களை வாசிக்கும் நேரத்தினை தொலைக்காட்சி பார்க்கவும் கணினி விளையாட்டுக்களில் ஈடுபடவும் பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்லவும் பயன்படுத்திக்கொள்கின்றமை ஆகும் என்பது கல்வியியலாளர்கள் பெரும்பாலானோரின் ஒருமித்த கருத்தாகவுள்ளது.

வாசிப்புக்கு வித்திடும்

வாசிப்புத்திறனையும் அறிவுத்திறனையும் விருத்தி செய்வதில் நூலகங்கள் பெரும் துணைபுரிகின்றன. எனவே, 'வாசிப்பு' எந்தளவு முக்கியம் பெறுகின்றது என்றும் அதற்கு நூலகங்கள் எந்தளவுக்கு துணை புரிகின்றன என்பதையும் உணர்த்துவதற்கான ஒரு முயற்சியே இது.

ஏன் வாசிக்க வேண்டும்?

அறிவுத்திறன் வளம் பெற வாசிப்பு மிக முக்கியமானதாகும். மனதில் பரந்துபட்ட அறிவினைப் பெறும் போதே மனிதன் முழுமை பெறுகின்றான். நாட்டு நடப்புகள், வெளிநாட்டுத் தகவல்கள் உட்பட பல்துறைசார் விடயங்களை வாசிப்பதன் ஊடாக சிறந்த அறிவினைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், பகுத்தறிவுத் திறனை வளர்க்கவும் வாசிப்பு அவசியமாகும்.

அறிவுத் தேடலுக்காக மட்டுமன்றி, பொழுது போக்கிற்காகவும் வாசிப்பு அவசியமாகும். இதனால், ஆளுமை மிக்கவர்களாக நம்மை உருவாக்கிக்கொள்ள முடியும். வாழும் கலை பற்றி அறிந்துகொள்வதன் ஊடாக புரிந்துணர்வு, பொறுமை போன்ற உன்னத பண்புகளை நம்முள் வளர்த்துக்கொள்ள முடியும்.

எங்கே வாசிக்கலாம்?

புத்தகங்களை வாசிக்க விரும்பும் உங்களுக்கு சிறந்த ஓர் இடமாகவே நூலகங்கள் திகழ்கின்றன. அந்தவகையில், மாணவர்களை வரவேற்று, அறிவு விருந்தளிக்க பாடசாலை நூலகம் காத்திருக்கின்றது. சகல நூலகங்களுக்கும் இயன்றளவு வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்தி கொடுத்திருப்பதற்கான காரணம், சிறந்த அறிவுத்திறன் வாய்ந்த சந்ததியினரை உருவாக்குவதற்காகும். நூலகங்களில் உள்ள நூல்கள் பல லட்சம் ரூபா மதிப்பு கொண்டதாக இருந்தாலும் அவற்றை வாசிப்பதனூடாக நீங்கள் அறிந்துகொள்ளும் விடயங்கள் பன்மடங்கு அதிகமாகும்.

புத்தகங்களை விலைகொடுத்து வாங்கி வாசிக்க முடியாதபட்சத்தில் நூலகங்களுக்குச் சென்று, புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தினை உருவாக்கிக் கொள்ளமுடியும். இதனால், அறிவினை வளர்த்துக் கொள்வதற்கு உகந்த பிரதான இடமாக நூலகத்தைக் குறிப்பிடலாம். பாடசாலை நூலகம், பொது நூலகம், அலுவலக நூலகம், பல்கலைக்கழக நூலகம் என்று நூலகங்கள் பல்வேறு வகைப்படுகின்றன. இந்த நூலகங்களில் அங்கத்துவம் பெறுகின்ற, அதன் பயன்பாட்டினைப் பெறுபவர்கள் பலதரப்பட்டவர்களாக இருக்கின்றனர். பாடசாலை நூலகங்கள் பிள்ளைகளின் வாசிப்புத்திறனை வளர்க்கின்றன. எனவே, கல்விக்கு உதவி செய்கின்ற, ஆளுமையை வளர்க்கின்ற இடமாகவே நூலகம் கருதப்படுகின்றது.

எப்படி வாசிக்கலாம்?

வாசிப்புப் பழக்கத்தை சிறு வயது முதலே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். சிறு வயதிலிருந்தே நூல்களை வாசிப்பதனால் அறிவுத்திறனை வளர்த்துக்கொள்ளலாம்.

இதுவரை உங்களுக்கு புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் இல்லாதிருப்பின், அப்பழக்கத்தை இன்று முதல் ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அதன்படி, புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை வழக்கப்படுத்திக்கொள்வதற்கு பின்வரும் வழிமுறைகளை நீங்கள் பின்பற்றலாம்.

★ அடிக்கடி நூலகம் செல்கின்ற அல்லது புத்தகங்களை வாசிக்கின்றவர்களிடமிருந்து வாசிப்பின் பயன் பற்றி அறிந்துகொள்ளுங்கள். அதற்கேற்ப முதலில் நூலகம் சென்று அங்கு வருவோரையும் அவர்கள் புத்தகங்களை தெரிவு செய்யும் விதத்தினையும் அவற்றை எடுத்துச் செல்லும் முறைகள் பற்றியும் கண்காணியுங்கள். பலதரப்பட்டவர்கள் புத்தகங்களுடன் நட்புக்கொண்டிருப்பதனை உங்களால் அறிந்துகொள்ள முடியும். அது புத்தகங்களை வாசிக்கும் ஆர்வத்தினை உங்களுக்கு ஏற்படுத்தும்.

★ வாசிப்பதற்கு உகந்த புத்தகங்களைத் தெரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்

செய்யுங்கள். சகல புத்தகங்களிலும் உங்களுக்குத் தெரியாத விடயம் ஒன்று கட்டாயம் உள்ளடங்கியிருக்கும். சில பக்கங்களைப் புரட்டுவதன் ஊடாக புத்தகங்களை வாசிக்கும் ஆற்றலினை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

★ வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்திக்கொள்வதற்காக, முதலில் குறைந்த பக்கங்கள் உள்ள புத்தகத்தை தெரிவு செய்யுங்கள்.

★ உங்களுக்குப் பயன்தரக்கூடிய, உங்களை கவர்ந்த விடயங்களை உள்ளடக்கிய நூல்களை முதலில் வாசிக்கப் பழகுங்கள். புத்தகங்களை வாசிப்பதை உங்களுக்குள் வழக்கப்படுத்திக்கொண்ட பின்னர் பல்வேறு விடயங்கள் சார்ந்த புத்தகங்களை வாசிக்க முயலுங்கள்.

★ ஒரே நாளில், தொடர்ச்சியாக புத்தகங்களை வாசித்துக்கொண்டிருப்பது சலிப்பினை ஏற்படுத்தும் என்பதனால், இடைவெளி விட்டு வாசியுங்கள்.

புத்தகங்களை எவ்வாறு தெரிவு செய்வது?

முதன்முதலில் நூலகத்துக்குச் செல்லும்போது உங்களுக்கு விருப்பமான துறைசார்ந்த புத்தகங்களை

தெரிவு செய்வதில் ஆரம்பத்தில் சற்று சிக்கல் ஏற்படலாம். எனவே, அதற்காக நூலகத்தினைப் பயன்படுத்தும் வழக்கத்தினை உடைய உங்கள் நண்பர் அல்லது ஏனைய ஒருவரின் உதவியினை நாடுங்கள். அல்லது நூலக அலுவலரின் உதவியினை நாடுங்கள்.

ஒவ்வொரு பிரிவுக்காகவும் இலக்கங்கள் பொறிக்கப்பட்டு, தனித்தனி ராக்கைகளில் புத்தகங்கள் அடுக்கப்பட்டிருக்கின்றமையை நூலகங்களில் காணமுடியும். வரலாறு, கணிதம், பொருளாதாரம், விஞ்ஞானம், மொழி, மொழிபெயர்ப்புக்கள் என அவை வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டிருக்கும். இலங்கையில் பெரும்பாலும் 'டிவி' (DIVI) தசம பிரிவின் அடிப்படையிலேயே புத்தகங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. உலகில் பல்வேறு வகைப்படுத்தல் முறைகள் இருந்தாலும், மிகவும் வெற்றிகரமான வகைப்படுத்தல் முறையாக இதனைக் குறிப்பிடலாம்.

அவ்வாறே, நூலகங்களில் அட்டவணை ஒன்றும் உள்ளது. அதில் புத்தகங்களின் பெயர், எழுதியவரின் பெயர், உரிமையாளர் போன்ற விபரங்களை பெற்றுக்கொள்ளமுடியும். இந்த அட்டவணையை பரிசீலிப்பதன் ஊடாக உங்களுக்குத் தேவையான புத்தகம் உள்ளதா? என்ற விபரத்தினை அறிந்துகொள்ள முடியும். அட்டவணையில் நீங்கள் தேடும் புத்தகம் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ராக்கையில் அந்த புத்தகம் இல்லாவிடின் வாசகர் ஒருவர் அதனை எடுத்துச் சென்றிருக்கலாம் என்று கருதிக் கொள்ளுங்கள். இதனை நூலக அலுவலரிடம் கேட்டும் அறிந்துகொள்ளலாம்.

அனைவருக்கும் பொதுவானது

நூலகம் என்பது பொதுச் சொத்தாகும். உங்களுடைய ஓர் உபகரணமாகவே நூலகங்களில் உள்ள புத்தகங்களை நீங்கள் கருதவேண்டும். நீங்கள் பாடசாலையை விட்டு விலகும் வரையில் நூலகம் உங்களுக்கு உதவுகின்றது. அவ்வாறே, உங்களுக்குப் பின்னர் வரும் தம்பி, தங்கைகளுக்கும் அதனை விட்டு வைக்கவேண்டும். ஒரு புத்தகம் ஆயிரக்கணக்கானவர்களின் கைகளை சென்றடைகின்றது என்பதனை நீங்கள் நினைவில் கொள்வது அவசியமாகும். எனவே, புத்தகங்களைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் அதனை கவனமாகக் கையாளவேண்டும். புத்தகங்களின் பக்கங்களை கிழித்தல், கோடிடல், கருத்துக்களை எழுதி வைத்தல் போன்றன தவிர்க்கப்பட வேண்டியவையே.

ஒரு சிலர் புத்தகங்களை வாசித்த பக்கத்தினை நினைவிற்கொள்ள அதன் ஒரு பக்க மூலையினை மடித்து வைக்கும் வழக்கத்தினைக் கொண்டுள்ளனர். அவ்வாறு செய்யாமல் Book Mark ஒன்றைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். புத்தகங்களை சரியாகப் பிடிக்காமை, புத்தகத்தின் மீது சாய்ந்துகொண்டு வாசித்தல், கட்டிலில் படுத்தவாறு புத்தகங்களை வாசித்தல், சாப்பிட்டுக்கொண்டு புத்தகம் வாசித்தல், புத்தகங்களை கீழே விழுத்துதல் என்பன அவை பழுதடைவதற்கான பிரதான காரணங்களாகும்.

நூலக அலுவலகர் குறிப்பிட்டுத் தரும் திகதியில் புத்தகங்களை கையளிக்கத் தவறாதீர்கள். எடுக்கும் புத்தகங்களை உடனடியாக வாசித்து முடிப்பதே இதற்கான சிறந்த தீர்வாகும். வாரக்கணக்கில் நீங்கள் புத்தகங்களை வைத்துக்கொண்டிருந்தால் மற்றவர்களுக்கு அப்புத்தகத்தினை வாசிப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டாது. புத்தகத்திற்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டிருந்தால் அதுபற்றி அலுவலகரிடம் அறிவியுங்கள்.

உங்களுக்கென்று ஒரு நூலகம்

சிறு வயது முதல் உங்கள் பெற்றோர் மற்றும் உறவினர்கள் உங்களுக்கு வழங்கிய புத்தகங்கள், அன்பளிப்பாகக் கிடைத்த புத்தகங்கள் என்பனவற்றை நீங்கள் சேகரித்து வைத்துள்ளீர்களா? அவ்வாறாயின், அவை அனைத்தையும் தனி அறையில் அல்லது

அறையின் குறிப்பிட்ட ஓர் இடத்தில் வைத்து உங்களுக்கென ஒரு நூலகத்தை அமைக்கலாம். வெவ்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் நூல்களை ஒன்று திரட்டுவதனாலும் மாதாந்தம் புதிய புத்தகங்களை வாங்குவதன் ஊடாகவும் இந்த நூலகத்தை நீங்கள் விரிவுபடுத்த முடியும்.

மற்றவர்களுக்கும் வாய்ப்பு

நீங்கள் எவ்வளவுதான் புத்தகங்களை சேகரித்திருந்தாலும் அவற்றை மற்றவர்களுக்கும் பயன்படுத்துவதற்கு இடமளிக்காவிட்டால், அதனால் எந்தப் பயனும் இல்லை. எனவே, அயலில் இருக்கும் பிள்ளைகள், உங்கள் நண்பர்களுக்கும் இந்த புத்தகங்களை வாசிக்க இடமளியுங்கள். அவர்களுக்கு வழங்கும் புத்தகங்களை குறித்து வைத்துக்கொள்ளுங்கள். மீளக் கையளிக்க வேண்டிய நாள் ஒன்றினைக் குறிப்பிடுங்கள். புத்தகங்களை கவனமாகக் கையாளவேண்டும் என்று அவர்களை அறிவுறுத்துங்கள்.

வாசித்தல் நித்திரைக்கு ஓர் அருமருந்தா?

எம்மில் சிலர் நித்திரைக்கு செல்லும்போது புத்தகம் ஒன்றைக் கையில் எடுத்துச் செல்வதனை காணமுடிகின்றது. இது தவறான காரியமாகும். இதனை வழக்கப்படுத்திக்கொண்டால், சாதாரணமாக புத்தகம் வாசிக்கும்போதெல்லாம் உங்களுக்கு நித்திரை ஏற்பட்டுவிடும். அதுவே, நாளடைவில் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தைக் கைவிடச் செய்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சியும் நாமும்

நவீன உலகில் தகவல் தொடர்பு சாதனங்களில் தொலைக்காட்சி முக்கியத்துவம் பெறுகின்றது. சின்னத்திரை நம் அறிவுக்கும் அகத்துக்கும் பயனளிக்கும் பல்வேறு தகவல்களைத் தருகிறது.

சிறார்களாகிய எமக்கு தொலைக்காட்சி பெரிதும்

உதவுகின்றது. அறிவு தரும் பல நல்ல தகவல்களை வழங்குகிறது. பல அறிஞர்களினதும் மேதைகளினதும் அறிவுரைகளை வழங்கி உற்சாகப்படுத்துகிறது. சிந்திக்கும் ஆற்றலை மேலோங்கச் செய்ய பல போட்டி நிகழ்ச்சிகளை உருவாக்கித் தருகிறது. நவீன சூழலுக்கு ஏற்ப நாம் செயற்பட பல்வேறு வகையில் உதவி புரிகிறது.

நாட்டு நடப்பு உலக நடப்புக்களை அறிய செய்திகளை தந்து கொண்டு இருக்கிறது. அதுமட்டுமன்றி, சுகாதாரம் சம்பந்தமான பல விடயங்களையும் உடல் நலம் பற்றிய அறிவுரைகளையும் வழங்கும் ஒரு சேவை நிலையமாகவும் தொலைக்காட்சி விளங்குகிறது.

எண்ணிலடங்கா சேவைகளை வழங்கும் தொலைக்காட்சியால் சில தீமைகளும் ஏற்படத்தான் செய்கின்றன. தொலைக்காட்சியை அதிக நேரம் பார்ப்பதால் நம் கண்களுக்கு பெரிதும் பாதிப்பு ஏற்படுகின்றது. உடல் ஆரோக்கியத்துக்கு மட்டுமன்றி எமது உள ஆரோக்கியத்துக்கும்

தொலைக்காட்சி தீங்கு விளைவிக்கவும் செய்கிறது.

தரக்குறைவான சினிமாப் பாடல்கள், படங்கள் என்பனவற்றால் சின்னஞ்சிறார்களின் கல்வி பாதிப்படைவதோடு அவர்களின் மனநிலையும் பாதிப்படைகிறது.

அதனால், தொலைக்காட்சி மூலம் கிடைக்கும் நன்மைகளை மட்டும் பயன்படுத்திக் கொண்டு ஏனையவற்றை தவிர்த்துக் கொள்வோமானால் நம் உடல், உள ஆரோக்கியத்துக்கு ஏற்படும் பாதிப்புகளிலிருந்து தப்பிக்கொள்வதோடு சிறந்த அறிவையும் பெற்றுக்கொள்ளலாம்.

கே.ஆர்.ரிஸ்னா, தரம் - 9[A],
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.

உங்களுக்குத் தெரியுமா?

* போத்தல் வாயை மூடுவதற்குப் பயன்படுத்தப்படும் கோர்க் (Cork) அடைப்புகள் எங்கிருந்து எப்படிப்பெறப்படுகின்றன தெரியுமா? போர்க்-ஓக் என்ற மரத்திலிருந்து பெறப்படுகின்றன. மத்திய தரைக்கடல் நாடுகளில் இவ்வகை மரங்கள் உள்ளன.

* உலகிலேயே மிகப்பெரிய காடு எங்குள்ளது? இது தென் அமெரிக் காவில் 'அமேசன்' வடிநிலத்திலுள்ளது. உயர்ந்து வளர்ந்த மரங்கள் பசுமையும் அடர்த்தியுமாகக் காணப்படுகின்றன. இது செல்வாஸ் என்ற பெயர் கொண்டது.

* தாமரை இலை நீரில் ஏன் நனைவதில்லை? தாமரை இலைப்பரப்பின் மீது மெழுகு போன்ற ஒரு படிவு உள்ளது. இப்படிவு இலைகளை நீரில் ஒட்டாமல் பாதுகாக்கின்றது.

* வாழ்நாள் முழுவதும் நீர் அருந்தாத பிராணி எது தெரியுமா? அமெரிக்க பாலைவன நிலங்களில் வாழ்கின்ற கங்காரு எலி தண்ணீர் அருந்துவதில்லை. உண்ணும் தாவரங்களிலிருந்து சிறிதளவு நீரைப் பெற்றுக்கொள்கிறது.

* பூரானுக்கு எத்தனை கால்கள் தெரியுமா? பூரானை 'நூற்றுக் காலி' என்பார்கள். ஆனால், 15 சோடியிலிருந்து 173 சோடிகள் வரைக்குமான கால்களை கொண்டது பூரான்.

தொகுப்பு:
எம்.ஆர்.இனாமுல் ரிபாத்,
கெகுணகொல்ல தே.பாட.,

விவசாயியின் சவால்

(சென்ற வாரத் தொடர்ச்சி....)

விவசாயியைத் தந்திரமாக விசாரித்து தங்கக்கட்டியை வாங்க ஆசைப்பட்டார் பிரபு. ''நல்ல ஆளப்பா நீ. இதுபற்றி அறியக் காரணமென்ன?'' என்று கேட்டார் அவர்.

''சரி சொல்வதற்கு உங்களுக்கு விருப்பமில்லை என்றால் சொல்ல வேண்டாம். நேரமாகிவிட்டது. நான் போகவேண்டும். என்னுடைய உணவு எனக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றது'' என்றான் விவசாயி.

பிரபு விற்கு பதற்றம் பிடித்து விட்டது. பேராசையால் அவருக்கு உடம்பு நடுங்கிற்று. இவனை எப்படியாவது ஏமாற்றி தங்கக்கட்டியை பெறவேண்டும் என நினைத்தார் அவர். பிறகு ''இதோ பாரப்பா நீ நல்லவனாக இருக்கின்றாய். நீ விரும்பினாய் என்றால் இங்கு என்னுடன் உணவு உண்ணலாம்'' எனக் கூறினார்.

பின்னர் தமது வேலைக்காரர்களை அழைத்து ''சீக்கிரம் மேல்மாடிக்குப் போய் உணவுகளை எடுத்துவையுங்கள்'' என்றார் பிரபு. பின்னர் விவசாயியை அழைத்து சாப்பிடுமாறு கூறினார். மற்ற இரு விவசாயிகளும் வேலிக்கு அப்பாலிருந்து இதனைக் கண்காணித்துக் கொண்டிருந்தனர். பிரபு விவசாயியிடம் ''நன்றாகச் சாப்பிடுப்பா. நிறையக் குடி. கூச்சப்படாதே'' என்றார். அவன் சாப்பிடும்போது அவனது தட்டில் உணவை நிரப்பிக் கொண்டு இருந்தார் பிரபு. அவன் சாப்பிட்டு முடிந்ததும், பிரபு அவனிடம் ''இப்போது நீ சீக்கிரம் போய் அந்தத் தங்கக்கட்டியைக் கொண்டு வா. உனக்கு நான் 2000 ரூபா தருகின்றேன். அதை என்ன செய்ய வேண்டும் என்பது உன்னை விட எனக்குத்தான் நன்கு தெரியும்'' என்றார்.

அதற்கு விவசாயி, ''பிரபுவே அதைக்கொண்டு வந்து என்னால் கொடுக்கமுடியாது'' என்றான். ''ஏன்?'' எனக் கேட்டார் பிரபு. ''ஏனென்றால், அப்படியான தங்கக் கட்டி எதுவும் என்னிடம் இல்லையே!'' என்றான் விவசாயி.

''பிறகு ஏன் தங்கம் பற்றித்தெரிந்து கொள்ள விரும்பினாய்''?

''இல்லை பிரபுவே, சும்மா அப்படியொரு ஆவல் உண்டாயிற்று''

பிரபு காலால் பலமாகத் தரையை உதைத்தார். ''முட்டாள் போ வெளியே'' என்று கூச்சலிட்டார். விவசாயி அமைதியாக ''மாண்புமிக்க பிரபுவே தாங்கள் நினைப்பது போல நான் முட்டாள் இல்லை. நான் ஒரு நாடகம் நடத்தி உங்கள் செலவில் உண்டு களித்தேன். அதுமட்டுமா? பந்தயத்தில் 3 மூடை மாவும் 2 காளைகளையும் வென்றுவிட்டேன். முட்டாள் செய்கின்ற காரியமல்லவே இது'' என்று கூறிவிட்டு அங்கிருந்து நடையைக் கட்டினான்.

என்.நுஸ்ரத் பானு, தரம் - 9[T],
புனித அந்தோனியார் ம.கல்.,
கண்டி.

நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும்

சிலப்பதிகாரம்	- இளங்கோவடிகள்
ஆத்திசூடி	- ஔவையார்
கம்பராமாயணம்	- கம்பர்
பாஞ்சாலி சபதம்	- பாரதியார்
சத்தியசோதனை	- காந்தியடிகள்
குண்டலகேசி	- நாகுதத்தனார்
சீறாப்புராணம்	- உமறுப்புலவர்
பெரிய புராணம்	- சேக்கிழார்
மணிமேகலை	- சீத்தலைச்சாத்தனார்
அரிச்சந்திர புராணம்	- வீரகவிராயர்

தொகுப்பு : எம்.எப்.எம்.சப்றான்,
தரம் - 10[B](புவியியல்),
தி/அல்-ஹம்றா ம.வித்.,
தோப்பூர்.

மாணவர் ஆக்கங்கள்

சாதனை சாத்தியமே

சாதனை என்பது சாத்தியமே
சரித்திரம் உரைக்கும் சத்தியமே!
சின்னப்பிள்ளை ஆனாலும்
சிகரம் தொடலாம் முன்னேறு!

முயற்சி பயிற்சி இருந்தாலே
எல்லாம் முடியும் உன்னாலே
முடியும் என்று சொன்னாலே
முடிப்பாய் நீயும் முன்னாலே!

இதயத் துடிப்பு உனக்குண்டு
இலக்கு என்பது நமக்குண்டு
உழைப்பை விதைத்தால்
உயர்வுண்டு
உழைக்கும் உரிமை
உனக்குண்டு!

வாழ்க்கை என்பது போராட்டம்
வாழ்ந்தால் உலகம் பாராட்டும்
நம்பிக்கை உனது கைகளிலே
திறமை உனது தோள்களிலே
அச்சம் தவிர்த்து எழுந்திடு
உச்சம் தொட்டே உயர்ந்திடு
எழுச்சி கொண்டு நடந்திடு
கையை உயர்த்தி முழங்கிடு!

சாதனை செய்ய வயதில்லை
சோதனை இல்லா
வாழ்வில்லை-இனி
வானம்தானே எல்லை
நீ வளரும் சின்னப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்.இல: 3167

எஃப்.நூரா,
தரம் - 2B,
அல்-ஹிலால் ம.க.,
நீர்கொழும்பு.

அங்.இல: 3168

தி.அபிவர்ணா,
தரம் - 4D,
சைவப்பிரகாச ம.கல்.,
வவுனியா.

அங்.இல: 3169

க.யதுஷன்,
தரம் - 9C,
யாழ்.மத்திய கல்.,
யாழ்ப்பாணம்.

அங்.இல: 3170

எம்.நஸ்லி,
தரம் - 3A,
திப்பிட்டிய மு.ம.வித்.,
திப்பிட்டிய.

அங்.இல: 3171

இரா.சிரோமினி,
தரம் - 9,
திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்.

அங்.இல: 3172

ஜே.திவாகர்,
தரம் - 9A,
ஹைலன்ஸ் ம.கல்.,
ஹட்டன்.

அங்.இல: 3173

எம்.றிஸ்கான்,
தரம் - 9C,
ஸாஹிரா தே.பாட.,
கல்முனை.

அங்.இல: 3174

பெ.பிரசாந்,
தரம் - 11,
தொட்டுலாகலை
த.க.வி., அப்புத்தளை.

விஜய் மாணவர் கழகம்

அங்.இல: 3175

ஆர்.ஏ.கிறிஸ்டினா,
தரம் - 11A,
புனித மரியாள்
த.ம.வித்., புத்தளம்.

அங்.இல: 3176

எப்.ஹுமைதா,
தரம் - 3A,
மு.ம.வித்.,
கஹடோவிட்ட.

அங்.இல: 3177

ஏ.றஸ்ஸானா,
தரம் - 8,
அல்-ஹிரா மு.ம.ம.வித்.,
திருகோணமலை.

அங்.இல: 3178

எம்.அனஸ்,
தரம் - 9,
க.மு.ம.வித்.,
கம்பளை.

அங்.இல: 3179

அதீக் அஹமட்,
தரம் - 6C,
அஸ்ஹர் ம.கல்.,
அகுறனை.

அங்.இல: 3180

எம்.ஸாஜித்,
தரம் - 11,
தி/கிண்ணியா ம.கல்.,
கிண்ணியா.

அங்.இல: 3181

எஃப்.மின்ஹா,
தரம் - 10,
முஸ்லிம் ம.கல்.,
காலி.

அங்.இல: 3182

யோ.தேனுஜா,
தரம் - 9,
வேம்படி ம.உ.பாட.,
யாழ்ப்பாணம்.

கணித மாதிரி வினாத்தாளுக்கான விடைகள்

(நொவெம்பர் 18 ஆம் திகதி பிரசுரமானது)

(01) 2	(02) 2	(03) 1	(04) 3
(05) 2	(06) 2	(07) 2	(08) 2
(09) 3	(10) 2	(11) 784	(12) 8m 40cm
(13) 7kg 150g	(14) 7l 100ml	(15) 673	(16) 3m 50cm
(17) 3kg 750g	(18) 3l 600ml	(19) 14 பேர்	(20) 4
(21) இட்லி	(22) 		(23)
(24) 4250ml	(25) 2	(26) 6	
(27) 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்		(28) ரூபாய் 100.00	
(29) ரூபாய் 11.50	(30) ரூபாய் 95.25	(31) 3m 40cm	(32) 8m 22cm
(33) 2m 70cm	(34) 7kg 600g	(35) 3kg 500g	(36) 8l 400ml
(37) 2l 950ml	(38) 522 பென்சில்கள்		
(39) ரூபாய் 516.00	(40) 104 தோடம்பழங்கள்		

வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்

இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான அநேக விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ முதலாம் பரிசு
ரூபா 3,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ இரண்டாம் பரிசு
ரூபா 2,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ மூன்றாம் பரிசு
ரூபா 1,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ 10 ஆறுதல் பரிசுகள்
ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 02.12.2009 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

**வீரோதார-விஜய்
குறுக்கெழுத்துப் போட்டி இல: 20
'விஜய்',
த.பெ.இல: 2037, கொழும்பு.**

1 சி	கி	ச்	2 சை		3 கா
கி			டி		ன
4 ரி	பா		5 கு	டு	க
யா					ம்
	6 செ	வ்	7 வா	ய்	
8 நெ	டி		ழை		

குறுக்கெழுத்துப் போட்டி இல: 18 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

முதலாம் பரிசு
மொஹமட் ஸிபார்,
ஹரீனா விலா,
யக்கஸ் முள்ள,
வீரகெட்டிய.

இரண்டாம் பரிசு
ஜே.ஏ.பிறிற்றோ,
மாதா கோவில் வீதி,
தலைமன்னார்.

மூன்றாம் பரிசு
ப.ரூத் நிலோஷனா,
33, கோவில் வீதி
ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

1	2			3	
				ணா	
	கி		4		
5			ரு		
ளி		6			7
8					எ

பெயர் : .....
வீட்டு முகவரி : .....
.....
தொலைபேசி இல : .....
பாடசாலை : .....
அருகிலுள்ள நகரம் : .....
மாவட்டம் : .....

மேலிருந்து கீழ்

2. பிறர் நலனுக்காக தன் நலனை இழந்தவர்.
3. சூழலுக்கேற்ப நிறம் மாறும் உயிரினம்.
4. இளந்தளிரைக் குறிக்கும்.
5. அரச குடும்பத்தினரின் இல்லம்.
7. நோய் ஏற்படுத்தும் ஓர் உயிரினம். (தலைகீழாக இருக்கிறது)

இடமிருந்து வலம்

1. இதன் முதுகில் அமர்ந்து சவாரி செய்யலாம்.
3. சத்தம் என்றும் சொல்லலாம்.
4. உயிர்களிடத்தில் காட்ட வேண்டியது.
6. நிலவை இப்படியும் சொல்வார்கள்.
7. சிறையில் தண்டனை அனுபவிப்பவர்.

ஆறுதல் பரிசுகள்

கோ.விஷாலன்,
241, பாடசாலை வீதி,
சேனைக்குடியிருப்பு.

எம்.ஜே.ருவீனா,
88/1, சாம மாவத்தை,
தியத்தலாவ.

ஜே.ஜதுர்சன்,
T ஆனந்தராஜா கடைவீதி,
பனையடி,
நுரைச்சோலை.

எச்.எம்.பயாஜ் அஹமட்,
48/17, ஜன்னத் மாவத்தை,
பாவாலேன்,
காத்தான்குடி-06.

எஸ்.ஜனரஞ்சனி,
கிளிவ்லேண்ட் டிவிஷன்,
அப்கொட்.

எம்.எஸ்.ஸஃத்,
ஹிஜ்ரா மாவத்தை,
வெலிப்பன்ன.

ஏ.நிரோஷா தமயந்தி,
190/24, பிரிவன வீதி,
தெஹியோவிட.

பஸ்லா துல்பிகார,
140/5, கண்டி வீதி,
மின்ஷாத் மாவத்தை,
திஹாரிய, கலகெடிஹேன.

ஆர்.ரக்ஷனா,
40, தபாற்கந்தோர் வீதி,
திருகோணமலை.

எஃப்.அஸ்ரபா மகாஸா,
07, பிரிவென றோட்,
கொலன்னாவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிப்பொத்தானையைச் சேர்ந்த ஜவுபர்-றிஸ்வானா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹமட் சர்ராஜ், 10.11.2009 அன்று தனது நான்காவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். இவரை உம்மா, வாப்பா மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால், சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்-றொசானா பர்வீன்)

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

அக்கரப்பத்தனை, சட்டன் எஸ்டேட்டை சேர்ந்த ரவிதியாகராஜா-லலிதாராணி தம்பதியரின் செல்வப் புதல்வி யதுஷா, 26.11.2009 அன்று தனது பத்தாவது பிறந்த தினத்தைக் கொண்டாடவுள்ளார். இவரை அம்மா, அப்பாவுடன் இணைந்து உறவினர்கள் அனைவரும் ஸ்ரீ முத்துமாரியம்மன் அருள் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல் : எஸ்.பரிமளா)

மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

ஆசிரியர்

பாத்திமா ஹஸீனா,
தரம் - 7[B], அல்-அஸ்ஹர் வித்.,
ஏறாவூர்.

ஆர்.நஸ்ரின் பானு,
தரம் - 8[G], மதீனா தே.பாட.,
சியம்பலாகஸ்கொடுவ.

எம்.எஸ்.சில்மியா, தரம் - 6,
மடிகே அனுக்கன மு.ம.வித்.,
குளியாப்பிட்டி.

மாம்பழம்



எஸ்.ஜெயவேந்தர், தரம் 1[A],
தலவாக்கலை த.ம.வித்.,
தலவாக்கலை.



பாத்திமா ஹஷ்மா, தரம் - 3[F],
நளீம் ஹாஜியார் ம.கல்.,
பேருவளை.



இ.இரேஷா,
தரம் - 4, எக்பத் த.வித்.,
சூரியாகந்தை.

பட்டம்



டீ.ஷெஷான்,
தரம் - 4, கதிரேசன் ம. கல்.,
நாவலப்பிட்டி.

ரா.தேருகா, தரம் - 1[A],
நெளுக்குளம் அருள் பாட.,
வவுனியா.

எச்.ஹிஸ்றி, தரம் - 3,
குறிஞ்சிப்பிட்டி மு.வித்.,
கல்முனை.

நெடுஞ்சாலையில் வாகனங்கள்

பாத்திமா மஸீஹா, தரம் - 9[F],
பதியூதீன் மஹ்மூத் ம.கல்.,
கண்டி.

கூசா

ஜெ.யாழினி,
தரம் - 6[A], யா/இந்து ம.கல்.,
கந்தர்மடம்.

எம்.ஏ.எஃப்.சஹ்லா,
தரம் - 7[b], மதீனா தே.பாட.,
கண்டி.

கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.எஃப்.எஃப்.ஸுமையா,
தரம் - 6[A],
அழுத்தகம மு.பெ.தே.பாட.,
தர்கா நகர்.

என்.துஷாந்தன்,
தரம் - 4[A],
மெராயா த.ம.வித்.,
மெராயா.

க.இம்ரான்கான்,
தரம் - 11,
தி/கிண்ணியா ம.கல்.,
கிண்ணியா-03..

எம்.எஃப்.முனவ்வரா,
தரம் - 8,
மீரா மத்திய கல்.,
கடுகஸ்தோட்டை.

மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

முடிவுத்திகதி 16.12.2009

பெப்ரவரி மாதத்துக்கான தலைப்புகள்

★ தரம் 1-5 - எனது தந்தை அல்லது குருவி
★ தரம் 6-8 - அன்னாசிச் செடி அல்லது பூவும் தேனீயும்
★ தரம் 9-11 - மழைக்காலம் அல்லது பால்மா பெக்கட்

அன்பார்ந்த தம்பி, தங்கைகளே!

நாம் கொடுக்கும் தலைப்புகளில் உங்கள் கைவண்ணங்களை விரைவில் அனுப்பி வையுங்கள். தெரிவு செய்யப்படும் கைவண்ணங்கள் இப்பகுதியில் பிரசுரமாகும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள். அத்துடன் உங்கள் பெயர், தரம், பாடசாலை, கைவண்ணத்தின் தலைப்பு என்பனவற்றை மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மைக்ரோசொஃப்ட் நிறுவனத்தின் விண்டோஸ் 7 அறிமுகம்

கணினியின் 'விண்டோஸ்' குடும்பத்தின் 'விண்டோஸ்-07' என்ற புதிய தொகுதி கடந்த ஒக்டோபர் மாதம் மைக்ரோசொஃப்ட் நிறுவனத்தினால் சந்தைப்படுத்தப்பட்டது.

இந்த சந்தைப்படுத்தல்களுக்கான உத்தியோகபூர்வ நிகழ்வு அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 'மைக்ரோசொஃப்ட்' நிறுவனத்தின் பிரதான அதிகாரியான ஸ்டீவ் பெல்மர்க்கின் தலைமையில் நடைபெற்றது. 'விண்டோஸ் விஸ்டா' தொகுதியின் முதல் பகுதி 2007 ஆம் ஆண்டிலேயே வெளியிடப்பட்டிருந்தது. அப்போது இன்னும் குறுகிய காலத்துள் அதன் மற்றுமொரு தொகுதி வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமையவே, தற்போது இந்த 'விண்டோஸ்-07' தொகுதி வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி 'விண்டோஸ்-07' தொகுதி மக்கள் பாவனைக்கு வழங்கப்படுவதற்கு முன்னர் 2009 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இதனை பரீட்சித்துப் பார்ப்பதற்கென கணினித்துறை வல்லுனர்களிடம் வழங்கப்பட்டிருந்தது. தொடர்ந்து மே மாதம் 05 ஆம் திகதி அன்றே இதனை பரீட்சித்துப் பார்ப்பதற்கென மக்களுக்கு வழங்கப்பட்டது.

இதன்படி, கடந்த ஒக்டோபர் மாதம் தொடக்கம் உத்தியோகபூர்வமாக இதனை சந்தைப்படுத்தியதையடுத்து எட்டு மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் தற்போதே இந்த தொகுதியை 'டவுன்லோர்ட்' செய்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கமைய, அடுத்த வருடத்தில் தமது வாடிக்கையாளர்களில் 50 வீதத்திற்கும் அதிகமானவர்கள் இந்த 'விண்டோஸ்-07' தொகுதியை பாவனைக்கு உட்படுத்தி விடுவர் என்பது தெரியவருவதாக 'மைக்ரோசொஃப்ட்' நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

சீனாவின் வளர்ச்சியை தடுக்கமாட்டோம்

-ஜனாதிபதி ஒபாமா

அமெரிக்கா எப்போதும் சீனாவின் வளர்ச்சியை தடுக்க முற்படாது என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகளுக்கான விஜயமொன்றை மேற்கொண்டு சீனாவிற்கு வந்திருந்தபோது, அந்நாட்டின் மாணவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ஒபாமா அவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், சீனாவின் எழுச்சியை தடுப்பதற்கான

அவசியம் தமக்கு இல்லை எனவும் பாரியதொரு சக்தி வாய்ந்த நாடாக சீனாவைத்தான் ஏற்றுக்கொள்வதாகவும் மற்றைய நாடுகளின் ஆட்சி முறைமையில் மூக்கை நுழைப்பதற்கான தேவையும் தமக்குக் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒபாமாவின் மேற்படி சீன விஜயமானது எத்தகைய மாற்றங்களை நிகழ்த்தக்கூடும் என்பது குறித்து ஆய்வாளர்கள் பலவிதமான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

ரகசியங்களை வெளியிட்ட ஜப்பான் அமைச்சர்

தமது நாட்டின் பொருளாதாரத் துறை சம்பந்தமான பல விடயங்களை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு முன்னதாக மறதியின் காரணமாக வேறொரு மாநாடொன்றில் வெளியிடப்பட்டதையிட்டு ஜப்பானின் வர்த்தகத்துறை அமைச்சர் மசயுனிநயோஷிமா ஜப்பான் அரசாங்கத்திடம் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

ஜப்பானின் பொருளாதாரத் திட்டமிடலில் அந்நாட்டின் எண்ணெய் உற்பத்தி சம்பந்தமான ரகசியமான தரவுகளையே குறித்த அமைச்சர் இவ்வாறு தெரியப்படுத்திவிட்டார்.

இவ்வாறு இந்த விபரங்களை அவர் வெளியிட்டமையால் ஜப்பானில் விலை மதிப்பீடுகளில் பாரிய சரிவு நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு வீழ்ச்சி நிலை ஏற்பட்டுள்ளமையானது ஜப்பானின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு

உகந்ததல்ல என்று பொருளாதார வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

அக்கினோவின் மகன் தேர்தலில் போட்டி

பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி குரோசோன் அக்கினோவின் மகனான செனட் சஹிக்க பெனிக்னோ, அந்நாட்டின் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவோரின் பட்டியலில் முன்னணியில் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பிலிப்பைன்ஸ் நாட்டில் 2010 ஆம் ஆண்டு

மே மாதம் தேர்தல் நடைபெறவுள்ளது.

அந்நாட்டின் 'பிளாய் ஏஷியா' என்ற குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிடக்கூடிய பெனிக்னோவிற்கு பொதுத்தேர்தல், ஜனாதிபதி தேர்தல், மாகாண சபை தேர்தல் அனைத்திலும் வெற்றியீட்டக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக கருதப்படுகின்றது.

அற்லஸ் கேள்வி - 231

கேள்வி: பிலிப்பைன்ஸில் எத்தனையாம் ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ளது?

சரியான விடை.....

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 231,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

போட்டி இல - 229 இன் சரியான விடை: டென்மார்க்

பரிசு பெறுவோர்

எஃப்.சல்மா,
61/19, ஜே.பி ஒழுங்கை, புத்தளம்.

கி.பிரசாத்,
555/15, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

கு.துசிஷா,
9ஏ, மஹிந்த பிளேஸ், கிருலப்பனை, கொழும்பு-06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

දුව: අම්මේ, හෙට අම්මට හරි, තාත්තාට හරි පාසලට එන්න කිව්වා.
அம்மே, ஹெட அம்மட ஹரி, தாத்தாட ஹரி பாஸலட என்ன கிவ்வா.

மகள்: அம்மா, நாளைக்கு அம்மாவை அல்லது அப்பாவை பாடசாலைக்கு வரச் சொன்னார்கள்.

අම්මා: ඒ ඇයි දුව?
ஏ எய் துவ?

அம்மா: அது ஏன் மகள்?

දුව: අපේ පන්ති කාමර පිරිසිදු කරන එක ගැන සාකච්ඡා කරන්න.
அபே பந்(த்)தி காமர பிரிசிது கறன எக கென சாகச்சா கறன்ன.

மகள்: எங்கள் வகுப்பறையைச் சுத்தம் செய்வது பற்றி கலந்துரையாடுவதற்காக.

අම්මා: කීයටද එන්න කිව්වේ?
கீயடத என்ன கிவ்வே?

அம்மா: எத்தனை மணிக்கு வரச் சொன்னார்கள்?

දුව: උදේ නවයට අපේ පන්ති කාමරයට එන්න.
உதே நவயட அபே பந்(த்)தி காமரயட என்ன.

மகள்: காலை ஒன்பது மணிக்கு எங்களுடைய வகுப்பறைக்கு வாருங்கள்.

තව අඩුපාඩුවලට සල්ලි එකතු කරනවා කියලත් කිව්වා.
தவ அடுபாடுவளட சல்லி எகது கறனவ கியலத் கிவ்வா.
இன்னும் சில குறைபாடுகளுக்காக பணம் சேகரிப்பதாகவும் சொன்னார்கள்.

අම්මා සල්ලිත් අරගෙන එන්න.
அம்மா சல்லித் அறகென என்ன.
அம்மா பணமும் எடுத்துக்கொண்டு வாருங்கள்.

අම්මා: එතකොට කවුද පන්ති කාමරයට තීන්ත ගන්නේ?
எதகொட கவுத பந்(த்)தி காமரயட தீந்த கான்னே?

அம்மா: அப்போ வகுப்பறைக்கு சுவர்ப் பூச்சு பூசுவது யார்?

දුව: ඒක ගුරුතුමිය සමග කතා කරගන්න.
ஏக குருதுமிய சமக கதா கறகன்ன.

மகள்: அதைப் பற்றி ஆசிரியையோடு பேசிக்கொள்ளுங்கள்.

සමහරවිට දෙමව්පියන්ම ගන්න පුළුවන්.
சமஹறவிட தெமவ்பியன்ம கான்ன புலுவன்.
சிலநேரம் பெற்றோர்களே பூசவேண்டி வரலாம்.

අම්මා: හොඳයි දුව. මම හෙට උදේට එන්නම්.
ஹொந்தய் துவ. மம ஹெட உதேட என்னம்.

அம்மா: நல்லது மகள். நான் நாளை காலையில் வருகிறேன்.

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.

உதா: பாடசாலைக்கு வரச் சொன்னார்கள்.
පාසලට එන්න කිව්වා.

i. சுத்தம் செய்வது பற்றி கலந்துரையாடுவதற்காக.
.....

ii. வகுப்பறைக்கு வாருங்கள்.
.....

iii. நான் நாளை காலையில் வருகிறேன்.
.....

✱ 'He, She, It' முதலான பிரதிப் பெயர்ச்சொற்களுக்குப் (**Pronouns**) பதிலாக, எழுவாய் பகுதியில் பெயர்ச்சொற்களைக் (**Nouns**) கையாண்டு அமைக்கப்படும் நிகழ்கால தனி வாக்கியங்களின் 'உடன்பாடு' மற்றும் 'வினா' வாக்கியங்கள் பின்வருமாறு அமைகின்றன.

(அ) Ranjith comes here in the evening. (Affirmative)
ரஞ்ஜித் இங்கே மாலையில் வருகின்றான். (உடன்பாடு)

(ஆ) Does Ranjith come here in the evening? (Interrogative)
ரஞ்ஜித் இங்கே மாலையில் வருகின்றானா? (வினா)
(ரஞ்ஜித் இங்கே மாலையில் வருவதுண்டா?)

(அ) Lalitha goes to office on week-days. (Affirmative)
லலிதா வார நாட்களில் அலுவலகத்துக்குப் போகின்றாள். (உடன்பாடு)

(ஆ) Does Lalitha go to office on week-ends? (Interrogative)
லலிதா வார இறுதி நாட்களில் அலுவலகத்துக்குப் போகின்றாளா? (வினா)
(லலிதா வார இறுதி நாட்களில் அலுவலகத்துக்குப் போவதுண்டா?)

(அ) This bus goes to Kandy. (Affirmative)
இந்தப் பேரூந்து கண்டிக்குப் போகின்றது. (உடன்பாடு)

(ஆ) Does this bus go to Kandy? (Interrogative)
இந்தப் பேரூந்து கண்டிக்குப் போகின்றதா? (வினா)
(இந்தப் பேரூந்து கண்டிக்குப் போவதுண்டா?)

(அ) My brother eats bread. (Affirmative)
எனது சகோதரன் பாண் சாப்பிடுகின்றான். (உடன்பாடு)

(ஆ) Does your brother eat bread? (Interrogative)
உனது சகோதரன் பாண் சாப்பிடுகின்றானா? (வினா)
(உனது சகோதரன் பாண் சாப்பிடுவதுண்டா?)

(அ) Your sister teaches English. (Affirmative)
உனது சகோதரி ஆங்கிலம் கற்பிக்கின்றாள். (உடன்பாடு)

(ஆ) Does your sister teach English? (Interrogative)
உனது சகோதரி ஆங்கிலம் கற்பிக்கின்றாளா? (வினா)
(உனது சகோதரி ஆங்கிலம் கற்பிப்பதுண்டா?)

(அ) This dog barks at night. (Affirimative)
இந்த நாய் இரவில் குரைக்கின்றது. (உடன்பாடு)

(ஆ) Does this dog bark at night? (Interrogative)
இந்த நாய் இரவில் குரைக்கின்றதா? (வினா)
(இந்த நாய் இரவில் குரைப்பதுண்டா?)

(அ) Your mother goes to work. (Affirmative)
உனது தாய் வேலைக்குப் போகின்றார். (உடன்பாடு)

(ஆ) Does your mother go to work? (Interrogative)
உனது தாய் வேலைக்குப் போகின்றாரா? (வினா)
(உனது தாய் வேலைக்குப் போவதுண்டா?

(அ) Your father reads the newspaper at night. (Affirmative)
உனது தந்தை இரவில் பத்திரிகை வாசிக்கின்றார். (உடன்பாடு)

(ஆ) Does your father read the newspaper at night? (Interrogative)
உனது தந்தை இரவில் பத்திரிகை வாசிக்கின்றாரா? (வினா)
(உனது தந்தை இரவில் பத்திரிகை வாசிப்பதுண்டா?)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய இளவரசனுக்கு நேர்ந்த கதி

முன்னொரு காலத்தில் ஓர் அரசர் இருந்தார். அவருக்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர். அவர்கள் மூவரும் திருமண வயதை அடைந்தபோது ஒருநாள், அரசர் அவர்களை அழைத்துக் கூறினார்;

"என் அருமைப் புதல்வர்களே, நான் கிழப்பருவம் எய்தும் முன்னர் உங்களுக்கு மணமாவதைப் பார்க்கவும் எனது பேரக்குழந்தைகளைக் கண்டு மகிழவும் விரும்புகிறேன்'' என்றார்.

புதல்வர்கள், ''தந்தையே, இதுவே உங்களது விருப்பமானால் எங்களை வாழ்த்துங்கள். நாங்கள் யாரை மணக்க வேண்டும் என விரும்புகிறீர்கள்?'' எனக் கேட்டனர்.

''புதல்வர்களே, இப்போது ஆளுக்கு ஓர் அம்பை எடுத்துக்கொண்டு திறந்தவெளிக்குச் சென்று அம்புகளை எய்யுங்கள். அவை எங்கே விழுகின்றனவோ, உங்களுக்கு விதிக்கப்பட்ட மணமகள்களை அங்கே நீங்கள் காண்பீர்கள்'' என்றார்.

புதல்வர்கள் தந்தையை வணங்கிவிட்டு, ஆளுக்கு ஓர் அம்பை எடுத்துக்கொண்டு திறந்தவெளிக்குச் சென்றனர். தங்களுடைய வில்களை இழுத்து அம்புகளை எய்தனர்.

மூத்த மகனுடைய அம்பு நிலப்பிரபு ஒருவரின் வெளிமுற்றத்தில் விழ, அதை அவருடைய மகள் எடுத்துக்கொண்டாள். இரண்டாவது மகனுடைய அம்பு பணக்கார வியாபாரி ஒருவருடைய வெளிமுற்றத்தில் விழ, அதை அவருடைய மகள் எடுத்துக்கொண்டாள்.

இளவரசன் இவான், தான் எய்த அம்பை வாயில் கௌவியபடி தவளை ஒன்று இருப்பதைக் கண்டான்

மூன்று திருமண விழாக்களும் சிறப்பாக நடைபெற்றன; மூத்தமகன் நிலப் பிரபுவின் மகளை மணந்தான், இரண்டாவது மகன் வியாபாரியினுடைய மகளையும் பரிதாபத்திற்குரிய இளவரசன் இவான் தவளையையும் மணந்தனர்.

சிறிது காலம் சென்றதும் அரசர் தனது புதல்வர்களை அழைத்துக் கூறினார், ''உங்கள் மனைவிகளில் தையல் வேலையில் சிறந்த வரைப் பார்க்க விரும்புகிறேன். நாளை காலைக்குள்ளாக ஒவ்வொருத்தரும் எனக்காக ஒரு சட்டை தைக்கட்டும்'' என்றார்.

மைந்தர்கள் தந்தையைப் பணிந்து வணங்கிவிட்டுப் புறப்பட்டுச் சென்றனர். இளவரசன் இவான் வீடு திரும்பி, தலை தாழ்த்தி அமர்ந்திருந்தான். தவளையோ தரைமீது தத்தித்தத்தி வந்து அவனிடம் கேட்டது; ''இளவரசன் இவானே, ஏன் தலை தாழ்ந்து இருக்கிறாய்? உனக்கு என்ன வருத்தம்?''

''நாளை காலைக்குள் நீ ஒரு சட்டை தைத்துத் தரவேண்டுமென்று என் தந்தையார் கூறுகிறார் என்றான்.

தவளை கூறியது; ''துயரப்பட வேண்டாம் இளவரசன் இவான். நீ படுக்கச் செல்; இன்று இரவை விடக் காலை உனக்குச் சிறந்ததாக இருக்கும்''

எனினும், இளவரசன் இவான் துயரத்துடனேயே படுக்கைக்குச் சென்றான். தவளையோ முற்றத்திற்குத் தத்திச் சென்றது.

(தொடரும்..)

இளைய மகன் இளவரசன் இவான் எய்த அம்பு அவனுக்கே தெரியாத ஓர் இடத்தில் விழுந்தது. அதைத் தேடிப் புறப்பட்ட அவன் பாதையில் ஒரு சதுப்புநிலத்தை அவதானித்தான். அங்கே அவன் எய்த அம்பை வாயில் கௌவியபடி தவளை ஒன்று இருப்பதைக் கண்ட இளவரசன் இவான்;

''தவளையே, தவளையே என் அம்பை என்னிடம் திருப்பித் தந்துவிடு'' என்றான்.

ஆனால் தவளையோ, ''நீ என்னை மணந்தால்தான் அதைத் திருப்பித் தருவேன்'' என்றது.

''என்ன சொல்கிறாய்? ஒரு தவளையை என்னால் எப்படி மணக்கமுடியும்?''

''நீ மணந்துதான் ஆகவேண்டும். ஏனெனில், நான்தான் உனக்கு விதிக்கப்பட்ட மணமகள்''

இளவரசன் இவான் கவலையுற்று, துயரமடைந்தான். எனினும், வேறொன்றும் செய்ய முடியாததால் தவளையை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

திருட்டுப் புத்தி

ஒரு காலத்தில் பக்காத் திருடன் பக்ரி என்று ஒருவன் வாழ்ந்துவந்தான். அவனைக் காவலர்களாலும் அரசராலும் கூட பிடிக்க முடியவில்லை. அவன் எந்த இடத்தில், எப்படி வந்து திருடுகிறான் என்பதை, யாராலும் கூற முடியவில்லை. திருட்டுப் போன பிறகே, அவன் வந்து சென்றதை அறிய முடியும்.

ஒரு முறை பக்ரி திருடர்களின் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டான். அப்போது, வேறு தேசத்தில் இருந்து வந்த திருடன் ஒருவன், தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டான். ஏனைய திருடர்களால் செய்ய முடியாத பெரிய நூதனமான திருட்டை பக்ரி செய்து காண்பித்தால், அவனை திருடர் தலைவனாக ஏற்றுக்கொள்ளலாம் என்று அவன் கருத்துத் தெரிவித்தான். இதை மற்றத் திருடர்களும் ஆமோதித்தனர்.

''இதற்காக என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டான் பக்ரி.

''அரசரின் அந்தப்புரத்திற்குள் நுழைந்து, அவர் அணிந்திருக்கும் கால் சட்டையைத் திருடிவர முடியுமா? அப்படிச் செய்தால் நீ பலே திருடன் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்'' என்றான் புதிய திருடன்.

''சரி அப்படியே செய்கிறேன்'' என்றான் பக்ரி புன்சிரிப்போடு. நான்கு நாட்களுக்குப் பின்னர், அமாவாசை இரவில், இடுப்பில், ஒரு சிறிய கறுப்புத் துணியை ஆடையாகக் கட்டிக் கொண்டான். இருட்டில் அவனை யாராலும் பார்க்க முடியாது. அவன், ஒரு நீண்ட மூங்கில் குழாயில் சிவப்பு எறும்புகள் சிலவற்றைப் பிடித்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

பின்பக்க வழியாக அந்தப்புரத்தை அடைந்து, அருகில் நின்ற மரத்தின் மீது ஏறி, ஜன்னல் வழியாக அரண்மனைக்குள் குதித்தான். காவலர்கள் கண்ணயர்ந்த நேரம் பார்த்து, அவன் அரசன் உறங்கும் அறைக்குள் நுழைந்தான். அமாவாசை இருட்டு அவனுக்குப் பெரிதும் உதவி செய்தது. அவன் அரசனின் கட்டிலை அடைந்து, ஒரு பக்கமாக நின்று, மூங்கில் குழாயில் இருக்கும் சிற்றெறும்புகளை. அரசனின் கால்களுக்கு அருகில் விழுமாறு ஊதிவிட்டான். எறும்புகள் அரசனின் கால் முழுவதும் ஏறி கால் சட்டைக்குள் புகுந்து கடிக்க ஆரம்பித்தன. முதலில் சிறிது கடித்தவுடன், அரசன் அவைகளைத் தட்டிவிட்டான். நேரம் ஆக ஆக சிற்றெறும்புகள் அவன் கால் முழுவதிலும் கடித்தன.

ஆகவே, எறும்பு புகுந்த கால் சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு வேறு ஒன்றைப் போட்டுக் கொண்டு அவன் மறுபடியும் தூங்கிவிட்டான். அரசன் கழற்றி எறிந்த கால் சட்டையை எடுத்துக்கொண்டு சத்தம் இல்லாமல் அங்கிருந்து தன் இருப்பிடம் வந்து சேர்ந்தான் பக்ரி. மறுநாள் காலையில் அவன் திருடர்களின் கூட்டத்திற்குச் சென்று தான் கொண்டு வந்த அரசனின் கால் சட்டையைக் காண்பித்தான் . அதைப்பார்த்த மற்றத் திருடர்கள், கைதட்டி அவனைப் பாராட்டினர். அவன் பெருமையைப் பேசி மகிழ்ந்தனர். புதிய திருடன், அவனது தந்திரத்தை, புத்திக்கூர்மையை பெரிதும் பாராட்டினான். எல்லோரும் மகிழ்ச்சியோடு பக்ரியை தங்கள் தலைவனாக ஏற்றுக் கொண்டனர். திருடர்கள் எவ்வகையான சாமர்த்தியசாலிகளாக இருக்கின்றனர் என்பது இதிலிருந்து புரிகிறதல்லவா. நாமும் அவதானமாக இருக்க வேண்டும் என்பதையே இக்கதை உணர்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சினின் விருந்து

கிரிக்கெட் களத்தில் தனது 20 வருட பூர்த்தியை கொண்டாடி மகிழ்ந்துள்ளார் இந்திய வீரர் சச்சின் டென்டுல்கர்.

1989 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 15 ஆம் திகதியன்றே டென்டுல்கர் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் கலந்து கொண்டிருந்தார். அதன்படியே, இந்த வருடம் அதே தினத்தில் 20 வருட பூர்த்தியை அவர் கொண்டாடியுள்ளார். இதனையொட்டி அகமதாபாத்தில் உள்ள பிரபல ஹோட்டலொன்றில் விருந்து நிகழ்வொன்றை டென்டுல்கர் ஏற்பாடு செய்திருந்தார். இதில் அவரது குடும்பத்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இருப்பைத் தக்கவைத்த ராகுல் டிராவிட்

இந்திய கிரிக்கெட் வீரர் ராகுல் டிராவிட் டெஸ்ட் போட்டிகளில் 11 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்களின் பட்டியலில் 5 ஆவது இடத்தைக் கைப்பற்றியுள்ளமையானது இந்திய கிரிக்கெட் தேர்வுக்குழுவினரை ஆறுதல் படுத்தியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை-இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 177 ஓட்டங்களை டிராவிட் பெற்றமையானது இந்திய அணியில் அவரது இருப்பை உறுதிப்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அணியிலிருந்து நீக்கப்படுவதும் பின்னர் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்படுவதுமாக இருந்த டிராவிட்டின் எதிர்கால இருப்பிற்கு இது சாதகமாக அமைந்திருப்பதாகவும் கருதப்படுகின்றது.

இப்போட்டியின்போது 251 பந்துகளில் 26 பவுன்டரிகளையும் ஒரு சிக்ஸரையும் அவர் பெற்றமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச அளவில் 11 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தவர்களின் பட்டியலில் டிராவிட் 5 ஆவது இடத்தில் இருப்பது போலவே, இந்திய வீரர்களின் பட்டியலில் 2 ஆவது வீரராக இடம் பிடித்துள்ளார்.

டெஸ்ட் களத்தில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்களின் பட்டியல் வருமாறு;

பெயர்	நாடு	போட்டிகள்	ஓட்டங்கள்
டென்டுல்கர்	இந்தியா	160	12,777
லாரா	மே.இ.தீவுகள்	131	11,953
பொன்டிங்	அவுஸ்திரேலியா	136	11,345
அலன்போடர்	அவுஸ்திரேலியா	156	11,174
டிராவிட்	இந்தியா	135	11,000
ஸ்டீவ் வோ	அவுஸ்திரேலியா	168	10,927
ஜெக் கலிஸ்	தெ.ஆபிரிக்கா	131	10,277
கவஸ்கர்	இந்தியா	125	10,122

ஐ.பி.எல் வீரர்கள் ஏலம் ஜனவரியில்

ஐ.பி.எல். போட்டிகளுக்கான வீரர்களை ஏலம் விடுதல் எதிர்வரும் ஜனவரி மாதம் 19 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட ஐ.பி.எல். போட்டியின் முதலாவது போட்டி இந்தியாவில் நடைபெற்றதுடன், இரண்டாவது போட்டி தென்னாபிரிக்காவில் நடைபெற்றமை நாம் அறிந்ததே.

இந்த வரிசையிலேயே மூன்றாவது போட்டி அடுத்த வருடம் நடைபெறவுள்ளது.இப் போட்டிகளுக்கான வீரர்களை ஏலம் விடுதல் ஜனவரி 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த ஏலத்திற்கென ஒவ்வொரு அணியும் ரூபா 3.75 கோடிக்கு மேல் செலவிட முடியாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆரம்பத்திலிருந்தே மீண்டும் அனைத்து வீரர்களையும் ஏலத்தில் எடுக்க வேண்டும் என்பதற்கும் இம்முறை ஐ.பி.எல் இல் மேலதிகமாக இன்னும் புதிதாக இரண்டு அணிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளமைக்கும் ஐ.பி.எல் அணிகளின் உரிமையாளர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

DLF INDIAN PREMIER LEAGUE

வட்டோரி டெஸ்ட்டில் கலந்து கொள்வார்

உடல் உபாதையின் காரணமாக பாகிஸ்தான்-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாமல் உள்ள நியூஸிலாந்து அணியின் தலைவர் டேனியல் வட்டோரி,குறித்த அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. நியூஸிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி நொவெம்பர் 24 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

தோள் பட்டையில் காயங்களுக்கு உள்ளாகியுள்ள வட்டோரியின் உடல் நிலை குறித்து பரிசோதிக்கப்பட்டதில் தற்போது அவர் தேறி வருவதாகவும் இதனாலேயே டெஸ்ட் போட்டிகளில் அவர் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

அணியின் உடற்கூற்று மருத்துவரின் கருத்தின்படி, வட்டோரியின் தோள்பட்டையில் ஏற்பட்டுள்ள உபாதை அவர் டெஸ்ட் போட்டியில் கலந்து கொள்வதற்கு எவ்வித தடையாகவும் இருக்காது என்று தெரிவித்துள்ளாமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை-இந்தியா-பங்களாதேஷ் முக்கோணப் போட்டிகள்

இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேஷில் முக்கோண ஒருநாள் போட்டிகளிலும் அதன் பின்னர் பங்களாதேஷ் அணியுடன் 2 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியா, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முக்கோண ஒருநாள் போட்டிகள் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகும். இப்போட்டியின் போது ஒவ்வொரு அணியும் மற்றைய அணிகளுடன் தலா இரண்டு முறை போட்டியிடும். தொடர்ந்து ஜனவரி மாதம் 13 ஆம் திகதி இறுதிப்போட்டி நடைபெறும்.

மேற்படி, முக்கோண ஒருநாள் போட்டித்தொடர் முடிவடைந்த பின்னரே பங்களாதேஷ் இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டிகள் ஆரம்பமாகும்.

அதன்படி, முதலாவது டெஸ்ட் போட்டி ஜனவரி 17 ஆம் திகதி ஆரம்பமாகும். இரண்டாவது டெஸ்ட் போட்டி ஜனவரி 24 ஆம் திகதி ஆரம்பமாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கா நோக்கி ஒரு புனிதப் பயணம்



ஒவ்வொரு ஆண்டும் இஸ்லாமிய வருடக்கணக்கின் இறுதி மாதமான துல்ஹஜ் மாதத்தில் மக்கா நகரை நோக்கி உலக முஸ்லிம்கள் ஒரு புனித பயணத்தை மேற்கொள்கின்றனர்.இதுதான் 'ஹஜ்' எனப் படுகின்றது. உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் திரண்டு வருகின்ற (ஹஜ் நிறைவேற்றுவதற்கான நிபந்தனைகளுக்கு உட்பட்ட) முஸ்லிம்கள் இன, குல, நிற, கலாசார வேறுபாடுகளின்றி அனைவரும் சமமானவர்கள் என்ற எண்ணத்துடன், இறைவனின் அருளை வேண்டி சங்கமிக்கும் ஒரு வழிபாட்டு நிகழ்வுதான் ஹஜ் ஆகும்.

இது பல்வேறுபட்ட தியாகங்களுடன் தொடர்புபட்ட ஒரு வணக்கமாகும். குறிப்பாக, நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் தியாகங்களை நினைவுகூரும் ஒரு வணக்கமாகவே ஹஜ் சிறப்பிக்கப்படுகின்றது. நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் தனது வாழ்வின் ஆரம்ப கட்டத்திலிருந்து மரணிக்கும்வரை அல்லாஹ்வுக்காக பல்வேறு தியாகங்களைப் புரிந்துள்ளார். அல்லாஹ் இந்த சம்பவங்களை மிகவும் நேசிப்பதனால்,அவற்றை அடிப்படையாக வைத்தே ஹஜ் கடமைகளை விதியாக்கியிருக்கின்றதோடு, அதன் நிறைவிலேயே பெருநாளையும் ஏற்படுத்தியிருக்கின்றான்.

ஹஜ்ஜுடைய நேரம் வரும் வரை.....

ஹஜ் கடமையை நிறைவேற்றக் காத்திருக்கும் அடியார்களில்,முதலில் உம்ராவை நிறைவேற்றுவதற்காக எண்ணம் வைத்தவர்கள் ஹஜ்ஜுடைய நேரம் வரும்வரை உம்ராவுக்கான கடமைகளில் ஈடுபடுவர்.

''நபி (ஸல்) அவர்கள் மக்கா வந்தபோது கஃபாவை ஏழு தடவைகள் வலம் வந்தார்கள். பின்னர், மகாமே இப்றாஹீமுக்குப் பின்னால் இரண்டு ரக்ஆத் தொழுதார்கள். பின்னர் ஸஃபாவுக்கு (ஓடுவதற்காகப்) புறப்பட்டார்கள்'' - அறிவிப்பவர் உமர் (ரழி) (ஆதாரம்:புஹாரி)

அதன்படி, கஃபாவில் தவாபை முடித்து-தொழுகையை நிறைவேற்றிய அல்லாஹ்வின் அடியார்கள் பின்னர் ஸம்ஸம் நீரை அருந்தி-அங்கு பிரார்த்தனைகளில் ஈடுபட்டு-ஸஃபா மர்வா மலைகளுக்கிடையில் 'ஸயீ' எனும் தொங்கோட்டத்துக்காக தயாராவர். அல்லாஹ்வின் கட்டளைப்படி இப்றாஹீம் (அலை) அவர்கள் தங்கள் அருமை மனைவி ஹாஜரா (ரழி) அவர்களையும் தனது மகன் இஸ்மாயீலையும் பாலைவனத்தில் தனித்து விட்டுச் சென்றபோது, உணவும் நீரும் முடிந்துவிட்டநிலையில் குழந்தையின் பசியைப் போக்குவதற்காக அன்னை ஹாஜரா (ரழி) அவர்கள் ஸஃபா மர்வா மலைகளுக்கிடையில் தண்ணீர் தேடி ஓடினார்கள். அப்போது, வீறிட்டழும் குழந்தையின் கால்படும் இடத்தில் என்றும் வற்றாத ஓர் அற்புத நீரூற்றை அல்லாஹ் ஏற்படுத்தினான். இதுதான் 'ஸம்ஸம்' நீரூற்று. இந்த சம்பவத்தை நினைவுகூருமுகமாகவே ஸஃபா மர்வாவுக்கிடையில் ஏழு முறைகள் ஓடுகின்றனர்.

இந்த அடிப்படையில் புனித உம்ராவை இனிதே நிறைவேற்றிவிட்டு அங்கு தங்கியிருப்பவர்கள், ஹஜ் கடமை ஆரம்பமாகும் வரை மதீனா நகருக்கு தமது பயணத்தை தொடர்வர். சிலர் ஹஜ் கடமையை முடித்துவிட்டு இங்கு செல்வதும் உண்டு. மதீனாவில் தான் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் அடக்கஸ்தலம் அமைந்துள்ளது. அங்குள்ள மஸ்ஜிதுன் நபவியில் மக்கள் தொழுவார்கள். அதனுடன், மேலதிக இறைவணக்கங்களில் ஈடுபடுவதும் வழக்கம்.

ஹஜ் நிறைவேற்றப்படும் வழிமுறைகள்

✱ துல்ஹஜ் மாதம் எட்டாம் நாள்: இன்றை தினத்திலேயே ஹஜ் கடமைகள் ஆரம்பமாகின்றன. ஹஜ் செய்வதற்கான நிய்யத் (எண்ணம்) உடன் மக்கா வந்த அடியார்கள், நிய்யத் வைத்து - இஹ்ராம் அணிந்தவர்களாக 'மினா' எனும் இடத்தை வந்தடைகின்றனர். 'இஹ்ராம்' என்பது ஹஜ் அல்லது உம்ரா கடமைகளை நிறைவேற்ற வருபவர்கள் அணிந்துகொள்ளும் ஆடம்பரமற்ற உடையாகும். மினாவில் அவர்கள் திருக்குர்ஆனை ஓதுவதிலும் தொழுகைகளிலும் பிரார்த்தனைகளிலும் ஈடுபடுவார்கள்.

✱ துல்ஹஜ் ஒன்பதாம் நாள்: அதிகாலையில் தொழப்படுகின்ற பஜ்ருத் தொழுகையை நிறைவேற்றிவிட்டு, அடுத்த கடமையை நிறைவேற்றுவதற்காக 'அரபாத்' நோக்கிப் புறப்படுவர். இன்றைய தினத்தில் காலையிலிருந்து சூரியன் மறையும்வரை அரபாத் மைதானத்தில் தங்கி, வணக்கங்களில் ஈடுபடுவதுதான் ஹஜ்ஜின் முக்கிய கடமையாகும். சூரியன் மறைந்த பின்னர் அரபாவிலிருந்து முஸ்தலிஃபாவுக்குச் செல்கின்றனர். அங்கு அல்லாஹ்வை நினைவு கூர்ந்தவர்களாக அன்றைய இரவை வணக்க வழிபாடுகளுடன் முஸ்தலிஃபாவில் கழிக்கின்றனர்.

மறுநாள் காலை பஜ்ருத் தொழுகையை விரைவில் முடித்துவிட்டு, சூரியன் உதிப்பதற்கு முன்னர் முஸ்தலிஃபாவிலிருந்து மினாவை நோக்கிப் புறப்படுவர்.

✱ துல்ஹஜ் 10 ஆம் நாள் (உலக முஸ்லிம்கள் இன்றைய தினத்தில்தான் ஹஜ் பெருநாளைக் கொண்டாடுவார்கள்): நபி இப்றாஹீம் (அலை) அவர்கள், தான் கண்ட கனவின் படி, மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களை பலியிடுவதற்காக அழைத்துச் சென்றபோது, ஷைத்தான் மூன்று இடங்களில் குறுக்கிட்டு அவர்களின் மனங்களை திசைதிருப்ப முற்படுகின்றான். அப்போது அவர்கள் ஷைத்தானை கல்வீசி விரட்டினார்கள். பின்னர், அல்லாஹ் அவருக்குப் பதிலாக ஓர் ஆட்டை பலியிடுமாறு கட்டளை இடுகின்றான். இதனை நினைவுபடுத்துமுகமாகவே ஹஜ்ஜுக்கு வருபவர்கள் அவ்விடங்களில் (ஜம்ராக்களில்)ஷைத்தானுக்குக் கல் எறிகின்றனர்.

இதனைத் தொடர்ந்து அல்லாஹ்வுக்காக 'உழ்ஹிய்யா'எனும் ஆடு அல்லது மாடு அல்லது ஒட்டகம் என்பனவற்றை குர்பான் செய்யும் நிகழ்விலும் அடுத்து தமது முடியை கத்தரித்துக் கொள்வதிலும் ஈடுபடுவார்கள். இதன் பின்னரே அவர்கள் இஹ்ராம் உடையிலிருந்து விடுபடுகின்றனர். இதனை அடுத்து, இறை இல்லமான கஃபதுல்லாஹ்வை 'தவாப்' செய்வதற்காக புறப்படுவர். இது கட்டாயம் செய்யப்படல் வேண்டும். 'தவாப்' என்பது கஃபாவை சுற்றி வருவதாகும். 7 முறைகள் கஃபாவை சுற்றி வருவது ஒரு தவாப் எனப்படுகின்றது.

✱ துல்ஹஜ் 11, 12ஆம் நாட்கள்: மேற்படி கடமைகளை முடித்து, தொடர்ந்து மூன்று தினங்களுக்கு மூன்று இடங்களில் சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்த பின்னர், நபி (ஸல்) அவர்கள் காட்டிய வழிமுறையைப் பின்பற்றி ஏழு கற்கள் வீதம் எறிவார்கள்.

✱ துல்ஹஜ் 13 ஆம் நாள்: இத்தினத்தில் ஹஜ்ஜின் அனைத்துக் கடமைகளும் நிறைவடைகின்றன. எவரேனும் 11, 12 ஆம் தினங்களில் கல்லெறிந்து விட்டுப் புறப்பட விரும்புவார்களாயின், அவர்கள் இரண்டாம் நாள் மஃரிபுக்கு முன்னர் புறப்படவேண்டும்.அல்லது 13ஆம் நாளும் கல்லெறிந்து விட்டுத்தான் புறப்பட வேண்டும். புறப்பட இருப்பவர்கள் கடைசியாக கஃபாவை தவாப் செய்துகொள்வார்கள். அங்கு ஏழு தடவைகள் கஃபாவை வலம் வந்து-மகாமே இப்றாஹீமில் தொழுது - தங்கள் ஹஜ் வணக்கத்தை நிறைவு செய்துகொள்வர்.

உண்மையில், ஹஜ்ஜுப் பெருநாளானது முழுமையாக தியாகத்தைப் பிரதிபலிக்கும் நாளாகவே அமைந்துள்ளது. அவற்றை ஞாபகப்படுத்துவதன் மூலம் அந்தப் பிரதிபலிப்புகள் நம்மிலும் ஏற்பட இறைவனிடம் பிரார்த்தித்தவர்களாக அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவோம். அனைவருக்கும் தியாகத் திருநாளாம் 'ஈதுல் அழ்ஹா' பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

–ஜீரு

இஹ்ராம் அணிந்த ஹஜ் யாத்திரிகர்கள்

ஸம்ஸம் நீரூற்று

கல் எறியும் இடம்

கஃபா அமைந்துள்ள பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்கு விருந்து 233 விடைகள்

போட்டி: 01



போட்டி: 03

1. 64 பெக்கட்கள்
2. * 57
   * 46

போட்டி: 05

1) beach	5) sun
2) ball	6) pool
3) flower	7) fan
4) shirts	8) frisbee

போட்டி: 04

அந்தக் காட்டில் தன்னை அடக்க ஆளில்லை என்ற எண்ணத்துடன் தந்திரம் மிக்க நரியொன்று வாழ்ந்து வந்தது. இதன் நடவடிக்கைகள் ஏனைய விலங்குகளுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்தன.

ஒருநாள் கடும் பசியால் வாடிய அந்த நரி, இரை தேடிக் காட்டில் அங்குமிங்கும் அலைந்தது. எனினும், இரை எதுவும் கிடைக்கவில்லை. அப்போது காட்டின் குன்றொன்றின் மேலிருந்த முரசொன்றைக் கண்டது. ஏதோ ஒரு விலங்குதான் இறந்து கிடக்கின்றது என எண்ணி அதன் அருகில் சென்றது. அதன்போது வீசிய காற்றின் காரணமாக அங்கிருந்த மரக்கிளைகள் முரசின் மீது மோதியதும் முரசிலிருந்து பேரோசை எழுந்தது.

உடனே நரி, "ஐயோ! ஒரு ராட்சத மிருகம் என்னைக் கொல்ல வருகின்றதே.." எனக் கூறியவாறு ஓடியது. நரியின் ஏமாற்றத்தைக் கண்டு ஏனைய விலங்குகள் வயிறு குலுங்கச் சிரித்தன.

அற்லஸ் அறிவுக்கு விருந்து - 233 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

போட்டி: 01
த.அட்ஷயா,
தரம் - 5[B], மட்/கஜமுகன் வித்.,
முறக்கொட்டாஞ்சேனை.

போட்டி: 02
அஸ்ரிபா ஹில்மி, தரம் - 3[F],
ஸாஹிரா தே.பா., மாவனல்லை.

போட்டி: 03
பி.சத்தியசீலன்,
தரம் - 9[B], ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்.,
லுணுகலை.

போட்டி: 04
எம்.முகர்ரம், தரம் - 10,
மஃஆனிமுல் முஸ்தபா அ.கல்.,
மட்டக்களப்பு.

போட்டி: 05
முனீரா பானு, தரம் - 5,
அநு/கனேவல்பொள முஃம்.வித்.,
கனேவல்பொள.

பாராட்டுப் பெறுவோர்

* பா.டெசிந்தா,
  யா/விக்டோரியா கல்.,
  யாழ்ப்பாணம்.
* எஃப்.தஹானி,
  தரம்-8, அல்-அமீன் ம.கல்.,
  எலபடகம.
* எம்.ஸஹ்னூன், தரம்-5,
  அல்-மிஸ்பாஹ் மு.வித்.,
  கல்முனை.
* ஸுஃரா ஸனீஃன், தரம்-8[E],
  அக்குறனை மு.பா.ம.வித்.,
  அக்குறனை.
* பி.மதுர்ஷனா, தரம்-2[B],
  மெராயா ம.வித்., லிந்துலை.
* எஸ்.எச்.ஷம்மாஸ், தரம்-5[A],
  அல்-மக்கியா மு.வித்.,
  இரத்தினபுரி.
* கார்லின் என்ட்றூ.
  வட்டரதென்ன வீதி, கண்டி.
* கி.கனிஷாறிதன், தரம்-7[B],
  வ.த.ம.ம.வித்., வவுனியா.
* டி.கமல்நாத், தரம்-11,
  கெங்கல்ல த.வித்.,
  கெங்கல்ல.
* எம்.நஃபீல்,
  தரம்-9[A], ஸாஹிரா கல்.,
  கொழும்பு-10.

தயாரிப்பு - நுஸ்பா கெளஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.12.02 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 236
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

1 ஆறு வித்தியாசங்களில் √ அடையாளமிடுங்கள்

2 பிழைகளைத் திருத்தி எழுதுக

1. காட்றாளை - .....
2. நீர்பாசணம் - .....
3. தகறாறு - .....
4. பெரும்மலவு - .....
5. சன்ஞ்சாரம் - .....
6. புதைக்குளி - .....

3 எத்தனை மரங்கள் உள்ளன?



4 கூட்டுக



5 பொருத்தமான படத்துடன் இணையுங்கள்

Coat
Skates
Scarf
Snowman
Mittens
Snowflake
Shovel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசியாவில் கண்ணாடிக் கோயில்

மலேசியாவின் ஜொஹோர் பாருவில் ஜலான் டெப்ரோ என்னும் இடத்தில் கண்ணாடிக் கோயில் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அருள்மிகு ஸ்ரீ ராஜகாளியம்மன் என்னும் இந்த இந்துக்கோயில் மலேசியாவில் உல்லாசப் பயணிகளை பெரிதும் கவரும் ஒரு பிரபல தலமாகவும் மாறிவருகிறது.

இந்தக் கோயிலின் நிர்மாணம் பற்றி அதன் அறங்காவலரான எஸ்.சின்னத்தம்பி கூறுகையில்; கோவிலின் 95 சதவீதமான சுவர்கள், உட்கூரைகள், தூண்கள் என்பன தாய்லாந்து, ஜப்பான், பெல்ஜியம் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 10 லட்சத்துக்கும் மேற்பட்ட வண்ண வண்ணக் கண்ணாடித் துண்டுகளாலேயே அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.



இந்தக் கண்ணாடித் துண்டுகள் மியன்மாரைச் சேர்ந்த ஒன்பது வேலையாட்கள் மற்றும் வல்லுனர்களால் மிகக் கவனமாக ஒன்று சேர்க்கப்பட்டு ஏழு வர்ணங்களில் சுவஸ்திகா, நாமம், ஸ்ரீ சக்கரம் போன்ற பல அடையாளங்கள் உருவாக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கோயில் அமைக்கப்பட்டுள்ள இடம் ஜொஹோரின் சுல்தானால் 1922 ஆம் ஆண்டு வழங்கப்பட்டதென்றும் 1996 ஆம் ஆண்டே அது புனர்நிர்மாணம் செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தாய்லாந்துப் பயணத்தின் போது, இக்கோயிலின் அறங்காவலர் அங்கு கண்ணாடிக் கோயிலொன்றைப் பார்த்து அதன் மூலம் தனக்கு அப்படியொரு கோயிலை நிர்மாணிக்க ஆர்வம் ஏற்பட்டதாகவும் கூறிய அவர் இந்தக் கோயில் நிர்மாணத்துக்காக கலாசார நிகழ்ச்சிகள் மூலமும் பொது மக்களிடமிருந்தும் நிதி சேகரிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். குளிரூட்டப்பட்ட இக்கோயில் சுமார் 1500 பக்தர்கள் இருக்கக்கூடியதாக உள்ளது.

மூன்று சகோதரிகள்

அவுஸ்திரேலியாவில் மூன்று சகோதரிகள் (Three Sisters) என்னும் புகழ்பெற்ற மூன்று மலைகள் உள்ளன. கட்டும்பா (Katoomba) நகருக்கு அருகில் உள்ள இந்த மலைகள் (Blue Mountain) புளு மவுண்டெய்ன் என்னும் மலைத் தொடரின் ஒரு பகுதியாகும். இந்த மலைகள் மீஹ்னி, விம்லா, குன்னேடு என்னும் பெயர்களில் அழைக்கப்படுகின்றன.

இந்த மலைகள் மண்ணரிப்பினால் உருவானவை என்று கூறப்படுகின்றது. 'புளு மவுண்டெய்ன்' மலையின் மென்மையான மணற் குன்றுகள் காற்று, மழை மற்றும் நதி நீர் காரணமாக பிளவுபட்டு உருவாகி இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இதேவேளை, இந்த மலைகள் எவ்வாறு உருவாகின என்பது பற்றி பாரம்பரியமான கதையொன்றும் கூறப்பட்டு வருகிறது.

முற்காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்த மூன்று சகோதரிகள் அண்மையில் உள்ள மலைசாதி இனத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்களுடன் நேசம் கொண்டுள்ளனர். எனினும், மலைசாதி இனத்தினரின் சட்டப்படி இவர்கள் திருமணம் செய்து கொள்வதற்குத் தடைவிதிக்கப்பட்டது. இதனையடுத்து இவர்களுக்குள் யுத்தம் மூண்டது. இவ்வேளையில், இந்த மூன்று சகோதரிகளை பாதுகாக்கும் வகையில் அவர்கள் இனத்தைச் சேர்ந்த மகிமை மிக்க மூத்தவர் ஒருவர் அவர்கள் மூவரையும் கற்பாறைகளாக உருமாற்றினர். ஆனால், யுத்தத்தின்போது அந்த மூத்தவர் கொல்லப்பட்டார். அதனால், மூன்று சகோதரிகளையும் மீண்டும் பழைய உருவத்தைப் பெறச் செய்ய யாராலும் முடியவில்லை. இதனாலேயே இந்த மலைகளுக்கு 'மூன்று சகோதரிகள்' என்னும் பெயர் ஏற்பட்டதாக பாரம்பரியமாக ஒரு கற்பனைக் கதை கூறப்பட்டு வருகிறது.

51 ஆண்டுகளுக்குப் பின் நூலகத்துக்கு திரும்பி வந்த புத்தகங்கள்

அமெரிக்காவில் ஒரு நூலகத்தில் 51 ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்துச் செல்லப்பட்ட 2 புத்தகங்கள் இப்பொழுது அபராதத் தொகையுடன் சேர்த்து பத்திரமாக தபாலில் திரும்பி வந்து ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளன.

போனிக்ஸ் நகரில் உள்ள கெமல்பேக் உயர்நிலைப் பள்ளி நூலகத்துக்கே இந்த புத்தகங்கள் 1000 டொலருக்கான மணி ஓடருடன் கடந்த 3 ஆம் திகதியன்று வந்து சேர்ந்துள்ளன. இது தொடர்பாக நூலகப் பொறுப்பாளர் ஜியோர்ஜெட் போர்ட்னி கூறுகையில்; ''தபாலில் வந்த பொதியில் இரண்டு புத்தகங்கள் இருந்தன. அதனுடன் 1000 டொலருக்கான மணி ஓடரும் வந்து சேர்ந்தது. அதனுடன் இருந்த கடிதம் என்னை வியப்புக்குள்ளாக்கியது.

1959 ஆம் ஆண்டு இந்த நூலகத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட புத்தகங்கள் அவை. இந்தப் பள்ளியின் முன்னாள் மாணவர் ஒருவரின் குடும்பத்தினரே அதனை திருப்பி அனுப்பியுள்ளனர். தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பாத அவர்கள் பள்ளி நூலகத்தில் புத்தகங்கள் எடுத்த பின்னர் வேறு மாநிலத்துக்கு இடம் மாறிச் சென்றுவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர். புத்தகங்களை மாணவர் திருப்பி அனுப்பத்தவறி அவற்றை வீட்டுப் பரணில் போட்டு வைத்துள்ளார். அண்மையில் அவற்றைக் கண்டதும் அப்போதைய ஒருநாள் அபராதக் கட்டணமாக 2 சதம் கணக்கிட்டு மணி ஓடர் அனுப்பியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். தினசரி 2 சதம் எனும்போது 51 ஆண்டுகளுக்கு அபராதம் (745 டொலர்) 35 ஆயிரம் ரூபா ஆகிறது. ஆனால், இடைப்பட்ட காலத்தில் அபராதக் கட்டணம் அதிகரித்திருக்கலாம் என்பதால் (1000 டொலர்) 47,000 ரூபா அனுப்பியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இது வரவேற்கத்தக்க விடயம். இந்தப் பணத்தில் நூலகத்துக்குப் புதிய புத்தகங்கள் வாங்கலாம்'' என்று கூறினார்.

திரும்பி வந்த புத்தகங்களில் ஒன்றுடன் நூலகப் பொறுப்பாளர் ஜியோர்ஜெட் போர்ட்னி காணப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகம்
நூலாந்துறைப் பிரிவு
மிசிகா வை, யாழ்ப்பாணம்.

CDMA தொலைபேசி என்றால் என்ன?

CDMA எனப்படும் தொலைபேசிப் பாவனை இன்று நமது நாட்டிலும் செயற்பாட்டில் உள்ளதை அறிவீர்கள். Code Division Multiple Access என்பதன் முதல் எழுத்துக்களின் சுருக்கமே CDMA என்று அழைக்கப்படுகின்றது. கைத்தொலைபேசியின் செயற்பாட்டை ஒத்த கம்பித் தொடர்புகள் அற்ற தொலைபேசி முறையே இந்த CDMA

ஆகும். சுமார் 33 வருடங்களுக்கு முன்னர் வெளிநாடுகளில் ராணுவத் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட கம்பியில்லாத் தொலைத்தொடர்பு நுட்பமாகவே இது அறிமுகமாகியிருந்தது. நாளடைவில் இன்று அது சாதாரண மக்களும் பயன்படுத்தும் ஒரு தொலைபேசி சேவையாக பரிணமித்துவிட்டது.

மேலும், இந்த தொலைபேசியை கணினியுடன் பொருத்துவதனால் மின்னஞ்சல் (email) இணையம் (Web) படங்களை அனுப்புதல், தொலைக்காட்சி ஒளி-ஒலி பரப்புச்சேவை ஆகியவற்றை கம்பியில்லாத் தொடர்புகளின் மூலம் பெற்றுக்கொள்ள முடிகின்றமை சிறப்பம்சமாகும்.

இதேவேளை, கைத்தொலைபேசி வகைக்குள் அடங்குகின்ற GSM (Global System of Mobile Communication) என்ற வலையமைப்பைவிட CDMA முறையானது தடங்கல் இல்லாத, தெளிவான தொழிற்பாட்டை கொண்டிருப்பதுடன் ஒரே தடவையில் ஒன்றுக்கு மேற்பட்ட அலைவரிசைகளைப் பயன்படுத்தக்கூடிய விரிந்த வலையமைப்பையும் கொண்டதாகும்.

GSM உட்பட அனைத்து தொலைபேசிகளும் 600 மில்லிவாற் மின்சாரத்தைப் பாவிக்கின்ற அதேநேரம் இந்த CDMA சேவையோ 200 மில்லிவாற் மின்சாரத்தையே பயன்படுத்துகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இதனால், இந்த CDMA தொலைபேசியை பயன்படுத்தும் நேரம் அதிகரிப்பதுடன், உடலுக்குத் தீங்கை ஏற்படுத்தக்கூடிய கதிரியக்கத் தாக்கங்களையும் தவிர்த்துக் கொள்ளமுடியும் என்றும் கருதப்படுகின்றது.

இதேவேளை, இந்த தொலைபேசி சேவையை மற்றவர்கள் ஒட்டுக்கேட்டுவிட முடியாது என்று கூறப்படுகின்றது. அதாவது, ஏதேனும் ஒரு தொலைபேசியை ஒட்டுக்கேட்பதற்கு அதன் அலைவரிசை எதுவென்று தெரிந்திருக்கவேண்டும். சாதாரண தொலைபேசிகளில் இந்த அலைவரிசை குறிப்பிட்ட ஒரு அலைவரிசையாக இருப்பதனால் இலகுவாக அவற்றை ஒட்டுக்கேட்க முடியும். ஆனால், CDMA தொலைபேசியோ நேரத்திற்கு நேரம் அலைவரிசையை மாற்றிக் கொள்வதனால் அதனை ஒட்டுக்கேட்பது சாத்தியப்படுவதில்லை.

எனவே, மேற்படி CDMA தொலைபேசி சேவையானது தொலைபேசி வரலாற்றில் ஒரு திருப்புமுனை என்றே கருதப்படுகின்றது. இதேவேளை, இதனை விரிவுபடுத்தத்தக்க புதிய ஆராய்ச்சிகளும் நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.





இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, நொவெம்பர் மாதம் 25 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 25, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org